Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

THURSDAY, MARCH 24, 2022

வியாழக்கிழமை மார்ச் 24, 2022 | ஒளி: 07 கதிர்: 264 | பக்கம்:09 | நகரப்பதிப்பு | FREE

## தமிழ் மிரருக்கு 3 விருதுகள்



இலங்கை பத்திரிகை ஸ்தாபனத்தின் 2019-2020 ஆம் ஆண்டுக்கான உயர் ஊடகவியல் விருது விழாவில் தமிழ்மிரர் பத்திரிகைக்கு 3 விருதுகள் கிடைத்துள்ளன.

தொடர்ச்சி P2



# “என்னை மன்னியுங்கள்”

## ரணிலிடம் மன்னிப்புக் கேட்டார் கோட்டா

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில், நேற்று (23) நடைபெற்ற சர்வகட்சி மாநாட்டில், ஐக்கிய தேசிய கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரணில் விக்கிரமசிங்கவிடம் ஜனாதிபதி கோட்டாபய மன்னிப்புக் கோரினார்.

அங்கு கருத்துரைத்த ரணில் விக்கிரமசிங்க, “உண்மையில் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் வேண்டுகோளின் பேரிலேயே இந்த சர்வகட்சிக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2



## ரணில் கேட்ட ஆவணத்தை

### கொடுக்க மறுத்தார் பசில்

சர்வதேச நாணய நிதியத்தால் வழங்கிய வரைவை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க முடியாது என, நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷ, நேற்று (23) தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## ஸ்டாலினிடம் வேண்டுகோள்



நாட்டில் ஏற்பட்டிருக்கும் பொருளாதார நெருக்கடியை அடுத்து, தமிழகத்தில் தஞ்சம் கோருவோரின் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்துள்ளது. தமிழகத்தின் கரையோரங்களின் பாதுகாப்பு கடுமையாக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் இருந்து தமிழகத்துக்கு நேற்று முன்தினம்(22) சென்றிருக்கும் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள், அங்குள்ள ஊடகங்களின் ஊடாக, தமிழக முதலமைச்சர் மு.க. ஸ்டாலினிடம் கோரிக்கையொன்றை முன்வைத்துள்ளனர்.

தொடர்ச்சி P2



## மக்கள் வெள்ளம்...

தேசிய மக்கள் சக்தியின் ஏற்பாட்டில் நேற்றையதினம் (23) நுகேகொடையில் முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்ட பேரணியால், தெல்கந்த மற்றும் நுகேகொடவை சுற்றிலும் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டிருந்தது. அதிகரித்து வரும் வாழ்க்கைச் செலவை கட்டுப்படுத்தவும், பொருளாதார நெருக்கடியைத் தீர்க்கவும் அரசாங்கத்தால் இயலவில்லை எனவும் தேசிய மக்கள் சக்தியினரால் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டு பேரணி இடம்பெற்றது. அரசாங்கம் மக்களின் இன்னல்கள் தொடர்பில் உணர்வற்ற முறையில் செயற்படுவதுடன் தற்போதைய அரசாங்கம் தொடர்ந்தும் ஆட்சியில் இருப்பதற்குப் பொருத்தமற்றது என்பதை நிரூபித்து வருகின்றது என, கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்தார். தெல்கந்த சந்தியிலிருந்து ஆரம்பமான ஆர்ப்பாட்ட பேரணி, நுகேகொடை ஆனந்த சமரகோன் திறந்த அரங்கில் பொதுக்கூட்டம் இடம்பெற்றது. கடந்த 74 ஆண்டுகளாக நாட்டை ஏழ்மை நிலைக்குத் தள்ளிய அரசாங்கத்தையும் ஏனைய அனைத்துக் கட்சிகளையும் தூக்கியெறிந்து, புதிய மக்கள் மைய ஆட்சியின் தொடக்கத்தை இப்பேரணி குறிக்கும் என்றும் தெரிவித்தார்.

### “தற்போதைய பொருளாதார பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு

## பேதமின்றி ஒன்றிணையுங்கள்”

தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு தீர்வுகாண, அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டுமென்று, அழைப்பு விடுத்த, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ குறுகியகால மற்றும் நீண்டகால உத்திகளை முன்னெடுப்பதன் மூலம் பொருளாதாரத்தை ஸ்திரமான நிலைக்கு கொண்டு வர வேண்டியதன் அவசியத்தையும் சுட்டிக்காட்டினார்.

தொடர்ச்சி P2

### குளவி கொட்டியதில்

## 5 வயது சிறுமி மரணம்

ஆ.ரமேஸ்



இராகலை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட மந்திரிதென்ன கிராமத்தில் குளவி கொட்டுக்கு இலக்காகி ஐந்து வயதான டப்ளியூ.எம்.லிதுமி ஒமயா எனும் சிறுமி, நேற்றுமுன்தினம் (22) இரவு உயிரிழந்துள்ளார்.

தொடர்ச்சி P2

## ரூ.600 கோடி பெறுமதியான ஹெரோய்ன் மீட்பு



பனாமாவில் இருந்து இலங்கைக்கு மீள் ஏற்றுமதிக்காக வந்த கொள்கலனொன்றில் இருந்த சுமார் 600 கோடி ரூபாய் பெறுமதியான 350 கிலோ கிராம் ஹெரொய்னை இலங்கை சுங்க போதைப்பொருள் தடுப்பு பிரிவினர், நேற்று (23) கைப்பற்றினர்.

தொடர்ச்சி P2



### இந்திய பிரதமர் மோடிக்கான

## மலையக தமிழர் அபிலாஷை ஆவணக் கடிதம் கையளிப்பு

இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கான, இந்திய வம்சாவளி மலையக தமிழ் இலங்கையர் சார்பான அபிலாஷை ஆவண கடிதத்தை, இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லேயிடம் தமிழ் முற்போக்கு கூட்டணி, கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தலைமையில் நேற்று (23) கையளித்தது.

தொடர்ச்சி P2

## பிரபாகரனால் முடியாதது கோட்டாவால் முடிந்தது

### சொன்னார் இராதா; காணி புளிக்குதாம்

பா.நிரோஸ்

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனால் 30 வருடங்களில் செய்ய முடியாததை, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இரண்டே வருடங்களில் செய்துவிட்டார் எனத் தெரிவித்த நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வே. இராதாகிருஸ்ணன், காணி உரிமை என்பது மலையக மக்களுக்கு எட்டாக்கனி என்றார்.



தொடர்ச்சி P2

### ஐ.எம்.எ:ப் செல்லும் இலங்கையின்

## தீர்மானத்துக்கு அமெரிக்கா வரவேற்பு

சர்வதேச நாணய நிதியத்திடம் (ஐஎம்.ஃஎப்) செல்வதற்கு இலங்கை மேற்கொண்டுள்ள தீர்மானத்துக்கு வரவேற்பதாக அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தின் அரசியல் நடவடிக்கைகள் தொடர்பான உப செயலாளர் விக்டோரியா நூலண்ட், நேற்று (23) தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று (23) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே மேற்குறிப்பிட்ட விடயத்தை அவர் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## ரூபாய் வீழ்ந்தது

அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி தொடர்ந்து வீழ்ச்சியடைந்து வருகிறது.

தொடர்ச்சி P2

## மனைவிக்காக வேலி பாய்ந்த மருமகன் மீது மாமா கத்திக்குத்து

நிறைமாத கர்ப்பிணியான தனது மனைவியின் ஆசையை நிறைவேற்றுவதற்காக மாமாவின் காணியிலிருந்த பலாமரத்தில் பலாக்காயைப் பறித்த மருமகனை, காணியின் சொந்தக்காரரான மாமா குத்திக் கொலை செய்துள்ளார்.



எல்பிட்டியவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில், மாமாவின் கத்திக்குத்தில் உயிரிழந்த மருமகன், இரண்டு பிள்ளைகளின் தந்தையாவார் என எல்பிட்டிய பொலிஸார் தெரிவித்தனர்.

மாமாவின் கத்திக்குத்தில் உயிரிழந்த வடக்கு எல்பிட்டிய, எகொடதெர பகுதியைச் சேர்ந்த கே.எம்.ஷெஹான் லசந்த (வயது 34) என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

தொடர்ச்சி P2

## டொக்டர் ஷாபி ஷிஹாப்தீனுக்கு

### கொடுப்பனவுகளை வழங்க தீர்மானம்

சட்டவிரோத கருத்தடை அறுவை சிகிச்சை செய்த குற்றச்சாட்டின் பேரில் கட்டாய விடுமுறையில் அனுப்பப்பட்ட குருநாகல் போதனா வைத்தியசாலையின் வைத்தியர் மொஹமட் ஷாபி ஷிஹாப்தீனுக்கு வழங்கப்பட வேண்டிய அனைத்து சம்பளம் மற்றும் இடைக்கால கொடுப்பனவுகளை வழங்குவதற்கு பொது நிர்வாக அமைச்சின் ஸ்தாபன பணிப்பாளர் நாயகம் தீர்மானித்துள்ளதாக சட்டமா அதிபர், மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு, நேற்று (23) அறிவித்தார்.

தொடர்ச்சி P2

## பண்டிகைக் காலத்தில் பயணக் கட்டுப்பாடு?

### உத்தரவாதம் இல்லை என நிபுணர்கள் தெரிவிப்பு

கொரோனா தொற்றாளர்கள் மற்றும் மரணங்கள் தற்போது ஒப்பீட்டளவில் குறைவாக இருந்தாலும், எதிர்வரும் பண்டிகைக் காலத்தில் பயணக் கட்டுப்பாடுகள் அல்லது சுகாதார வழிகாட்டுதல்கள் விதிக்கப்படாது என்பதற்கு எந்த உத்தரவாதமும் அளிக்க முடியாது என்று சுகாதார அமைச்சின் தொற்றுநோய் பிரிவின் பணிப்பாளர் வைத்தியர் சமித்த கினிகே தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



## “பால் பவுடர் கூட வாங்க முடியலை”

முழுச் செய்தி P7

# "என்னை மன்னியுங்கள்"

எனது பழைய நண்பனான, நிமல் சிறிபாலடி சில்வா, இந்தக் கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு என்னை அழைத்தார்.

கட்சி செயற்பாடுகள் மற்றும் அரசியல் நோக்கங்களுக்காக இந்தக் கூட்டத்தை பயன்படுத்தக்கூடாது" எனக் கேட்டுக்கொண்ட ரணில், "நாட்டின் இன்றைய நிலைமைக்கு கடந்த ஆட்சிதான் காரணமென மத்திய வங்கியின் ஆளுநர் கருத்துரைத்திருந்தார். அதற்கு நான் பதிலளித்திருந்தேன். இன்னும் பதிலளிக்கவேண்டுமாயின் பதிலளிப்பேன்.

நாடு முகங்கொடுக்கும் பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடி நல்ல தீர்மானத்தை எடுக்கவே இங்கு வந்துள்ளோம். இறுதியாக விஜய மன்னன் வந்தார். அவர், இலங்கைக்கு வந்திருக்காவிடின் இந்தப் பிரச்சினை இருக்காது" என்றும் ரணில் கூறினார்.

"நாங்கள் வேறு கொள்கையில் சென்றுகொண்டிருந்தோம் அந்தக்காலத்தில், பெற்றோல் இருந்தது மக்களுக்கு சாப்பிடவும் இருந்தது. எதிர்க்கட்சியில் ஒரு பிரிவினர் வரவில்லை. நான் வந்திருக்கின்றேன். அவர்களை தோல்வியுறச் செய்வதற்காக நான் இவ்விடத்துக்கு வரவில்லை. அவர்களையும் இணைத்துக்கொண்டு பயணிப்போம்" என்றார்.

அதன்பின்னர், கருத்துரைத்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, "உங்களுடைய மனது நோகுமாறு ஏதாவது காரணத்தைத் தெரிவித்திருந்தால் அதற்காக மன்னிப்பு கேட்டுக்கொள்கின்றேன். யார் மீதும் குற்றஞ்சாட்ட வரவில்லை, உண்மையில் பிரச்சினைக்குத் தீர்வு காணவும், சகலருடைய கருத்துகளையும் கேட்டுக்கொள்ளவே அழைத்தேன்" என்றார்.

# தமிழ் மிரருக்கு 3 விருதுகள்

தமிழ்மிரர் பத்திரிகையின் வணிக ஆசிரியர் எஸ்.சேகர் சிறந்த வணிகக் கட்டுரையாளர் (தமிழ்), கேலிச்சித்திரக் கலைஞர் நாமல் அமரசிங்க, சிறந்த கேலிச்சித்திரம் (தமிழ்) விருது, தமிழ்மிரர் பக்க வடிவமைப்பு குழுவின் முகாமையாளர் தாரக முத் துக்குமார, சிறந்த பக்கவடிவமைப்பு (தமிழ்) விருதையும் பெற்றுக்கொண்டனர்.

எமது வளர்ச்சிப் பயணத்தில் இணைந்துகொண்டிருக்கும், தமிழ்மிரர் இணையத்தளம், மின்னிதழ் மற்றும் எமது சமூக வலைத்தளங்களைச் சேர்ந்த வாசகர்களுக்கு, சுயாதீன ஊடகவியலாளர்கள் பத்தி எழுத்தாளர்கள், பிரதேச நிருபர்கள் உள்ளிட்டோருக்கு ஆசிரியர் பீடத்தின் சார்பில் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம் (ஆ-ர்)

மேலதிக படங்கள் (8 ஆம் பக்கத்தில்)

## ஸ்டாலினிடம் வேண்டுகோள்

சிங்கள அரசின் தவறான கொள்கைகளால் ஈழத்தில் ஏற்பட்டிருக்கும் பொருளாதார நெருக்கடியை சமாளிக்க முடியாமல் தமிழ் நாட்டில் தஞ்சம் புக வரும் ஈழத் தமிழ் உறவுகளை பாதுகாப்பாக அழைத்து வந்து தேவையான உதவிகளை செய்யுமாறு அவர்கள் கேட்டுக்கொண்டுள்ளனர்.

## டொக்டர் ஷாபி ...

ஷாபி தாக்கல் செய்த ரிட் மனு, நீதியரசர்களான சோபித ராஜகருணா மற்றும் தம்மிக்க கணேபொல ஆகியோர் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது, சட்டமா அதிபர் சார்பில் மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் சுமதி தர்மவர்தன மேற்குறிப்பிட்ட விடயத்தை அறிவித்தார்.

குருநாகல் போதனா வைத்தியசாலையில் கடமையாற்றிய மகப்பேற்றியல் நிபுணரான மனுதாரர், தான் தன்னிச்சையாகவும் சட்ட விரோதமாகவும் நியாயமான காரணமின்றி, தனது வேலையிலிருந்து கட்டாய விடுமுறையில் அனுப்பப்பட்டதாக மனுவில் சுட்டிக்காட்டியுள்ளார்.

குருநாகல் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் சந்தன கெந்தங்கமுவ, குருநாகல் போதனா வைத்தியசாலையின் முன்னாள் பணிப்பாளர் வைத்தியர் ஏ.எம்.எஸ்.வீர பண்டார, சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல, சுகாதார அமைச்சின் செயலாளர் டொக்டர் எஸ். எச்.முனசிங்க, சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் டொக்டர் அசேல குணரத்ன ஆகியோர், மனுவில் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

பெண்களுக்கு கருத்தடை செய்யும் நடைமுறைகளை மேற்கொண்டதாக வெறுக்கத்தக்க, திங்கிழைக்கும் மற்றும் இனரீதியாக குற்றம் சாட்டப்பட்ட பிரச்சாரத்தில் தான் பாதிக்கப்பட்டதாக மனுதாரர் குறிப்பிட்டுள்ளார்.

மகப்பேறியல் வைத்தியர்கள் உள்ளிட்ட துறைசார் நிபுணர்களால் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் சமகாலத்தில் அறிவியல் பூர்வமற்றது மற்றும் பொய்யானவை என மனுதாரர் தெரிவித்துள்ளார்.

# ரூபாய் வீழ்ந்தது

அமெரிக்க டொலரொன்றின் கொள்வனவு விலை 274.99 ரூபாயாகவும் விற்பனை விலை 284.99 ரூபாயாகவும் காணப்படுவதாக மத்திய வங்கி தரவுகள் நேற்று (23) சுட்டிக்காட்டியிருந்தபோதிலும் 285 ரூபாய் முதல் 290 ரூபாய்க்கு டொலர்கள் விற்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

அமெரிக்க டொலரொன்றுக்கான இலங்கை ரூபாயை 230 ஆக பேணுவதற்கு தீர்மானத்துள்ளதாக மத்திய வங்கி அண்மையில் அறிவித்திருந்த நிலையிலேயே மேற்குறிப்பிட்ட விற்கும் விலை அறிவிக்கப்பட்டுள்ளது.

அந்நிய செலாவணி வசதிகளை முன்னோக்கி விற்பனை செய்வதற்கும் வாங்குவதற்கும் வங்கிகளுக்கு அனுமதி வழங்கியுள்ளது.

## ரூ.600 கோடி பெறுமதியான ஹொக்கெய்ன் மீட்பு

மீள் ஏற்றுமதிக்காக இந்தியாவுக்கு அனுப்பப்பட்ட நான்கு கொள்கலன்களில் ஒன்றில் போதைப்பொருள் மறைத்து வைக்கப்பட்டு, பனாமாவிலிருந்து பெல்ஜியம் மற்றும் டுபாய் ஊடாக இலங்கைக்கு கொள்கலன்கள் கொண்டுவரப்பட்டுள்ளன என்று அதிகாரிகள் தெரிவித்தனர். மேலதிக விசாரணைகளுக்காக பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவினரிடம் ஹொக்கெய்ன் ஒப்படைக்கப்படவுள்ளது.

## பண்டிகைக் காலத்தில் பயணக் கட்டுப்பாடு?

சுகாதார மேம்பாட்டுப் பணியகத்தில் நேற்று (23) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே மேற்குறிப்பிட்ட விடயத்தைத் தெரிவித்தார்.

கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில், வைரஸ் தொற்றுக்கு எதிரான பாதுகாப்பு நடவடிக்கைகளை பொதுமக்கள் அதிகளவில் நாடியுள்ளனர் என்றும் கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில், நாட்டின் பெரும்பான்மையானவர்கள் முதன்மைத் தடுப்பூசிகளைப் பெற்றுள்ளனர் என்றும் குறிப்பிட்டார்.

பொதுமக்கள் தங்களது தனிப்பட்ட உடல்நலம் தொடர்பில் அவதானமாக இருக்குமாறும் நல்ல சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றுமாறும் அவர் அறிவுறுத்தினார்.

ஏப்ரல் 30 ஆம் திகதிக்கு முன்னர் முழுமையாக தடுப்பூசி போடப்படுவதை உறுதிசெய்யும் நோக்கில் பொதுமக்களை ஊக்குவிப்பதற்காக ஜனவரி 25 ஆம் திகதி வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டதாகவும், போதிய அவகாசம் வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் பொது இடங்களாக அடையாளம் காணப்பட்ட இடங்களுக்குள் நுழைவதற்கு முழுமையாக தடுப்பூசி போடுவது அவசியமாகும் எனவும் எதிர்காலத்தில் இது மாறக்கூடும் என்றும் குறிப்பிட்டார்.

# பிரபாகரனால் முடியாதது: கோட்டாவால் முடிந்தது

காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகள் மீதான நேற்றைய (23) விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து உரையாற்றிய அவர், சிங்கள, வடக்கு,கிழக்கு தமிழர்கள், முஸ்லிம் உள்ளிட்ட மக்களுக்கு இந்நாட்டில் காணிகள் உள்ளன. ஆனால், மலையக மக்களுக்கு காணிகள் என்பது எட்டாக்கனியாகவே உள்ளது என்றார்.

தொழிலாளர்களான அவர்கள் தொழில் இருந்து ஓய்வு பெற்றதன் பின்னர் அவர்கள் வாழ்வதற்கென ஒரு வீடு இல்லை. அவர்கள் வீதிகளில் நிற்கும் நிலையே காணப்படுகிறது. வாக்குரிமை இல்லாத காலத்திலும் வாக்குரிமை பெற்றுப் பின்னரும் மலையக மக்களுக்கு காணி உரிமைகள் கிடைக்கவில்லை என்றார்.

மாகாண சபைகளை முதலில் அமைத்து அதன் ஊடாக காணி பிரச்சினைக்கு தீர்வு காணப்பட வேண்டும் எனவும் தெரிவித்த அவர், முப்பது வருடங்கள் யுத்தம் செய்தும் நாட்டை பிரபாகரனால் அழிக்க முடியவில்லை. ஆனால், ஜனாதிபதியாக கோட்டாபய ராஜபக்ஷ பதவியேற்ற இரண்டே வருடங்களில் நாட்டை அவர் அழித்துவிட்டார் என்பதுபோன்ற ஒரு கேலிச்சித்திரத்தை தான் பார்த்ததாகவும் தெரிவித்தார்.

## "பேதமின்றி ஒன்றிணையுங்கள்"

தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு தீர்வுகாண, அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டுமென்று, அழைப்பு விடுத்த, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ குறுகியகால மற்றும் நீண்டகால உத்திகளை முன்னெடுப்பதன் மூலம் பொருளாதாரத்தை ஸ்திரமான நிலைக்கு கொண்டு வர வேண்டியதன் அவசியத்தையும் சுட்டிக்காட்டினார்.

கோட்டை ஜனாதிபதி மாளிகையில், நேற்று (23) காலை சர்வகட்சி மாநாட்டை ஆரம்பித்து வைத்து உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி, ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன, மக்கள் ஐக்கிய முன்னணி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தேசிய காங்கிரஸ், தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள், ஐக்கிய மக்கள் கட்சி, ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ், ஸ்ரீ லங்கா மகஜன கட்சி, ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி, அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், தேசிய முஸ்லிம் கூட்டமைப்பு, மக்கள் விடுதலை அமைப்பு, இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி ஆகிய கட்சிகளின் தலைவர்கள் மற்றும் பிரதிநிதிகள் இம்மாநாட்டில் கலந்துகொண்டனர்.

லங்கா சமசமாஜ கட்சியின் பேராசிரியர் திஸ்ஸ விதாரண மற்றும் வண. அத்துரலியே ரத்தின தேரர், 11 பங்காளிக் கட்சிகளை பிரதிநிதித்துவப்படுத்தி இம்மாநாட்டில் கலந்துகொண்டனர்.

நாடு எதிர்நோக்கியுள்ள பொருளாதார நெருக்கடிக்கான முன்மொழிவுகள் மற்றும் ஆலோசனைகளை எதிர்பார்த்து இந்த மாநாடு கூட்டப்பட்டது. கட்சித் தலைவர்களும் பிரதிநிதிகளும் எழுத்து மூலமாகவும், வாய்மொழியாகவும் தங்கள் முன்மொழிவுகளை சமர்ப்பித்தனர். நாட்டிற்காகவும் மக்களுக்காகவும் தங்களின் அதிகபட்ச பங்களிப்பையும் அர்ப்பணிப்பையும் சர்வகட்சி மாநாட்டிற்கு எதிர்காலத்தில் வழங்குவதாகவும் கட்சித் தலைவர்கள் மற்றும் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவார்ட் கப்ரால், தற்போதைய பொருளாதார நிலைமையை மாநாட்டில் முன்வைத்தார்.

சர்வகட்சி மாநாடு நேர்மையான ஒரு முயற்சி ஆகும். இதில் எந்தவித அரசியல் இலாபமோ குறுகிய நோக்கமோ கிடையாது எனவும் ஜனாதிபதி குறிப்பிட்டார். அரசாங்கத்தின் அழைப்பை ஏற்றதுடன்,

# ரணில் கேட்ட ஆவணத்தை

## கொடுக்க மறுத்தார் பசில்

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் ஜனாதிபதி மாளிகையில் நேற்று (23) நடைபெற்ற சர்வக்கட்சி மாநாட்டில், நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷவுக்கும் ரணில் விக்கிரமசிங்கவுக்கு இடையில் சுவாரஸ்யமான வாக்குவாதம் இடம்பெற்றது.

முன்னதாக கருத்துரைத்த ரணில், சர்வதேச நாணய நிதியம் தொடர்பில் வினவினார்.

அதற்கு பதிலளித்த அமைச்சர் பசில், "அவர்கள் இன்னும் அறிக்கையை சமர்ப்பிக்கவில்லை" என்றார்.

குறிக்கிட்ட ரணில், "அப்படியாயின் எந்த ஆவணத்தின் அடிப்படையில் பேச்சுநடத்துகின்றீர்கள். ஜனாதிபதி அவர்களே! நாணய நிதியத்தின் அதிகாரிகள் இருந்தால் இவ்விடத்துக்கு அழையுங்கள்" எனக் கேட்டார்.

பதிலளித்த பசில், "என்னை விட உங்களுக்கு நன்றாகத் தெரியும். முதலில் எங்களுக்கு அறிக்கையை சமர்ப்பிக்கமாட்டார்கள் ஒரு வரைவைதான் தருவார்கள் என்றார்.

குறுகிட்ட ரணில், அறிக்கை "இல்லையென்கின்றீர்கள் தற்போது வரைபு கிடைத்துள்ளது என்கின்றீர்கள். அப்படியாயின் அதனை தாருங்கள்" என்றார்.

பதிலளித்த பசில், "அறிக்கை உங்களுக்கு வேண்டுமா? வரைபு உங்களுக்கு வேண்டுமா?" எனக்கேட்டார். எனினும், "அறிக்கையோ, வரைவோ எனக்கு வேண்டாம். அதனை பாராளுமன்றத்தில் ஆற்றுப்படுத்துங்கள்" என ரணில் கேட்க, அதற்கு மறுப்புத் தெரிவித்த பசில் ராஜபக்ஷ, அதனை தன்னால் சமர்ப்பிக்க முடியாது எனக் கூறிவிட்டார்.

## 5 வயது சிறுமி மரணம்

தனது தாயுடன் அவர்களது காணிக்கு கடந்த திங்கட்கிழமை மதியம் சென்ற போது, குளவி கலைந்து இருவரையும் கொட்டியுள்ளது.

இதனையடுத்து, இவர்களை உடனடியாக நுவரெலியா மாவட்ட வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு சிகிச்சை பெற்று வந்தனர். எனினும், செவ்வாய்க்கிழமை (22) சிறுமி உயிரிழந்துவிட்டார். அவரது தாய் தொடர்ந்தும் சிகிச்சைப் பெற்று வருகின்றார்.

## ஐ.எம்.எஃப் செல்லும்...

மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கும் ஜனநாயக இடைவெளியை விரிவாக்கம் செய்யவும் இலங்கையை அமெரிக்கா ஊக்குவிப்பதாகக் குறிப்பிட்ட அவர், பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள மிக நெருக்கடியான நிலையில், தமது நாடு இலங்கையுடன் இருக்கும் என்று குறிப்பிட்டார்.

2030 ஆம் ஆண்டளவில் புதுப்பிக்கத்தக்க ஆற்றலில் இருந்து 70 வீத மின்சாரத்தை உற்பத்தி செய்யும் இலங்கையின் இலக்கை அமெரிக்கா வரவேற்றது.

நல்லிணக்கம் மற்றும் மனித உரிமைகளுக்கான கடப்பாடுகளில் தொடர்ந்து முன்னேறுமாறு இலங்கையை அமெரிக்கா ஊக்குவித்தது.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் நீண்டகாலமாக தடுத்து வைக்கப்பட்டிருந்த கைதிகளை விடுவித்தல், நீதி சீர்திருத்த நிகழ்ச்சி நிரல் மற்றும் சிவில் சமூகப் பிரதிநிதிகளுடனான ஈடுபாடு ஆகியவற்றையும் அமெரிக்கா வரவேற்றது.

இலங்கைக்கான தனது விஜயத்தில், அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் மற்றும் சமூக செயற்பாட்டாளர்களை சந்தித்து, அவர்கள் எதிர்நோக்கும் சிக்கல்கள் தொடர்பில் ஆராயவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இரு நாடுகளுக்கும் இடையிலான அடிப்படை விடயங்கள் குறித்து கலந்துரையாடப்பட்டுள்ளதாக இன்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது, வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் குறிப்பிட்டார்.

# மனைவிக்காக வேலி பாய்ந்த மருமகன் மீது மாமா கத்திக்குத்து

படுகாயமடைந்த நிலையில், வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் இளைஞன் உயிரிழந்துவிட்டார் என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. கத்திக்குத்து தாக்குதல் நடத்திய மாமா கைது செய்யப்பட்டுள்ளார் என்றும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

# மலையக தமிழர் அபிலாசை ஆவண கடிதம் கையளிப்பு

கொழும்பு இந்திய இல்லத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில் தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன், பிரதித் தலைவர் வே. இராதாகிருஷ்ணன், உதயகுமார் எம்.பி, கே.டி. குருசாமி, பேராசிரியர் சோ. சந்திரசேகரம் ஆகியோர் கலந்துக்கொண்டனர்.


இந்திய தரப்பில் உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே, துணை உயர்ஸ்தானிகர் வினோத் கே. ஜேகப், அரசியல் துறை செயலாளர் பானு பிரகாஷ் ஆகியோர் கலந்துக்கொண்டனர்.

இது தொடர்பில் தமிழ் முற்போக்கு கூட்டணி அறிவித்துள்ளதாவது, மனம் திறந்த கலந்துரையாடலுடன் இந்த சந்திப்பு மிகவும் திருப்திகரமாக அமைந்தது. இலங்கையில் வாழும் தமிழர் ஜனத்தொகையில் சமார் சரிபாதியான இந்திய வம்சாவளி மலையக தமிழ் இலங்கையர் தொடர்பான கூடிய அக்கறையை செலுத்த பிரதமர் நரேந்திர மோடியின் இந்திய ஒன்றிய அரசாங்கம் உறுதி பூண்டுள்ளதாக இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே தெரிவித்தார்.

இந்த பின்னணியில், இலங்கையின் முழுமைமிக்க குடிமக்களாக ஏனையோருடன் சமத்துவமாக வாழ விரும்பும் மலையக தமிழ் இலங்கையர் தொடர்பான இந்த அதிகாரபூர்வ ஆவணம் மிகவும் பயன்தருகிறது என அவர் மேலும் கூறினார். மலையக தமிழ் மக்களின் அனைத்து அபிலாசைகளையும் ஒருசேர பிரதிபலிக்கும் கோரிக்கைகள் உள்ளடங்கிய இத்தகைய ஆவணத்தை தயாரித்து முன்வைத்துள்ளமை தொடர்பில் தமிழ் முற்போக்கு கூட்டணிக்கு தந்து மகிழ்ச்சிகளையும், பாராட்டுகளையும் இந்திய உயர்ஸ்தானிகர் பாக்லே தெரிவித்தார்.

இதன் அபிலாசை ஆவண கடிதத்தை உடனடியாக பிரதமர் நரேந்திர மோடியின் அவதானத்துக்கு முறைப்படி அனுப்பி வைப்பதாக அவர், தமிழ் முற்போக்கு கூட்டணி தூதுக்குழுவுக்கு உறுதியளித்தார். மேலும் இனி வரும் எதிர்காலத்தில், இந்திய மற்றும் தமிழக அரசியல், சமூக, பரப்புகளில் இந்திய வம்சாவளி மலையக தமிழ் இலங்கையர் அதிக கவனத்தை பெற வேண்டும் எனவும், அதற்கான ஒத்துழைப்புகளை இந்த அரசு சார்பில் இந்திய தூதரகம் வழங்கும் எனவும் அவர் மேலும் கூறினார்.

அடுத்த வாரம் இலங்கை வருகைதரவுள்ள இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி ஜெய்சங்கர், தமிழ் முற்போக்கு கூட்டணியை சந்திக்கும் போது இது தொடர்பில் மேலும் கலந்துரையாடப்படும்.



பா. நிரோஸ்
ddnirosh@gmail.com



## நாட்டின் நெருக்கடி நிலைமைகளுக்கு
# ஜனாதிபதியே முழுப்பொறுப்பு

நாட்டின் நெருக்கடி நிலைமைகளுக்கு அரசாங்கத்தின் தவறான கொள்கையே காரணம் எனத் தெரிவித்த ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் கயந்த கருணாதிலக்க, ஜனாதிபதியே இதற்கு முழுப் பொறுப்புக்கூற வேண்டியவர் எனவும் தெரிவித்தார்.

காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகள் மீதான விவாதம் நேற்று (23) நடைபெற்றது. அதில், கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்து உரையாற்றிய அவர், நாட்டு மக்களுக்கு உரையாற்றிய ஜனாதிபதி, நாட்டின் நெருக்கடி நிலைமைகளுக்குத் தான் காரணமில்லை எனக் கூறியிருந்தார். எனினும் ஜனாதிபதியும் ஜனாதிபதிக்கு ஆலோசனை வழங்குபவர்களுமே விவசாயிகளின் நெருக்கடி நிலைமைகளுக்கு நூற்றுக்கு நூறு சதவீதம் பொறுப்புக்கூற வேண்டும் என்றார்.

காணிகளே நாட்டு மக்களின் சொத்துகளாக உள்ளன. எனினும் காணிகளைப் பயன்படுத்தி விவசாயம் செய்வதற்கு விவசாயிகளுக்கு உரம் இல்லை. அதேபோல, தங்களது காணிகளில் வீடுகளை நிர்மாணித்துக்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. வரலாற்றில் முன்னொருபோதும் இல்லாத வகையில் சீமெந்து உள்ளிட்ட கட்டட நிர்மாணப் பொருட்களின் விலைகள் அதிகரித்துள்ளன எனவும் தெரிவித்தார்.



# “பிச்சை எடுத்தாவது உணவளிப்போம்”

உலக நாடுகள் அனைத்தும் நெருக்கடி நிலைமைகளுக்கு முகங்கொடுத்து வருகின்றன. ஜப்பான், இந்தியா உள்ளிட்ட நாடுகளிலும் அத்தியாவசியப் பொருட்கள், எரிபொருட்களின் விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. நல்லாட்சி அரசாங்கமே நாட்டைத் தின்றதாகத் தெரிவிக்கும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்ணான்டோ, நல்லாட்சி அரசாங்கம் தின்றத்தையே நாம் சரி செய்து வருகிறோம் எனவும் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தின் நேற்றைய (23) அமர்வில் கலந்துகொண்டு தொடர்ந்து உரையாற்றிய அவர், நாட்டு மக்களின் உணவுகளுக்காக அரசாங்கம் வெளிநாடுகளில் பிச்சை எடுப்பதாக எதிர்க்கட்சியினர் எங்களை விமர்சிக்கிறார்கள். பிச்சை எடுத்தாவது நாட்டு மக்களுக்கு உணவளிப்போம்.

நல்லாட்சி அரசாங்கத்தால் நாட்டுக்கு தேவையான எரிபொருள், காஸ்களை பெற்றுக்கொள்ள முடியாத நிலையே காணப்பட்டது. எனினும் தற்போதைய அரசாங்கத்தில் அவ்வாறான நிலைமைகள் இல்லை.

நாட்டுக்கு தேவையான நெடுஞ்சாலைகளை நல்லாட்சி அரசாங்கத்தில் நிர்மாணித்திருந்தால் தற்போது அதிகளவான நிதிகளை செலவிட்டு அவற்றை நிர்மாணிக்கும் தேவை அரசாங்கத்துக்கு இருந்திருக்காது. அதுபோல, நெடுஞ்சாலைகள் அமைந்திருந்தால் எரிபொருளுக்கு மக்கள் அதிகளவில் செலவிட்டிருக்க மாட்டார்கள். அந்த மாகாணங்களின் சொத்துகளின் விலைகள் அதிகரித்திருக்கும்.

கொரோனா வைரஸ் நாட்டில் இருந்தாலும் அபிவிருத்திப் பணிகளை ஒருபோதும் நிறுத்த வேண்டாமென ஜனாதிபதி அறிவுறுத்தியிருந்தார். நாட்டில் எரிபொருள், காஸ் பிரச்சினை காணப்படுகிறது. இது தொடர்பில் நாம் பேச வேண்டும். இதற்கு நல்லாட்சி அரசாங்கமே பொறுப்புக்கூற வேண்டும். எவ்வாறாயினும் நாட்டில் காணப்படும் தற்போதைய பிரச்சினைகள் அனைத்தும் தற்காலிகமானது. இவற்றை தற்போதைய அரசாங்கம் விரைவிலேயே சரி செய்யும் எனவும் தெரிவித்தார்.



## தமிழ் – சிங்கள புதுவருடத்துக்கு முன்னர்
# “விலைகள் குறையும்”

தமிழ் - சிங்கள புத்தாண்டுக்கு முன்னர் தேங்காயின் விலை, தேங்காய் எண்ணெயின் விலையை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் இராஜாங்க அமைச்சர் இந்திக்க அநுருத்த தெரிவித்தார்.

பாராளுமன்றத்தின் நேற்றைய (23) அமர்வில் கலந்துகொண்டு வாய்மூல விடைக்கான வினாவை முன்வைத்து உரையாற்றிய ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹேசா விதானகே, 60 ரூபாய்க்கு காணப்பட்ட தேங்காய் ஒன்றின் விலை தற்போது 120 ரூபாயாக அதிகரித்துள்ளது. தற்போதைய அரசாங்கத்தின் இரு வருடக் காலத்திலேயே தேங்காய் ஒன்றின் விலை இரட்டிப்பாக அதிகரித்துள்ளது.

இந்நிலையில், தேங்காயின் விலையை குறைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா? எனவும் இதன்போது ஹேசா விதானகே கேள்வி எழுப்பினார்.

இதற்குப் பதிலளித்த இராஜாங்க அமைச்சர் அருந்திக பெர்ணான்டோ, நாட்டில் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ளது. அந்நிய செலாவணி குறைந்தமையே இதற்குக் காரணம். தேங்காய் உற்பத்தியை அதிகரிக்க வேண்டும். தேங்காய் உற்பத்திகளை மேற்கொள்ளப்படும் இடங்கள் கடந்த காலங்களில் பாரியளவில் அளிக்கப்பட்டுள்ளன எனவும் தெரிவித்தார்.

அரச பெருந்தோட்ட நிறுவனங்களின் கீழ் உற்பத்தி செய்யப்படும் தேங்காய்களையாவது குறைந்த விலைக்கு வழங்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கம் எனவும், தமிழ் - சிங்கள புத்தாண்டுக்கு முன்னர் தேங்காயின் விலை, தேங்காய் எண்ணெயின் விலையை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

# எதிர்க்கட்சி என்கிற குப்பையுடன் இணைய மாட்டேன்



“நான் தற்போதும் அரசாங்கத்திலேயே இருக்கிறேன்” எனத் தெரிவிக்கும் அரசாங்கத்தின் மீது அதிருப்தியில் உள்ள அமைச்சர் வாசுதேவ நாணயக்கார, எதிர்க்கட்சி என்கிற குப்பையுடன் தான் ஒருபோதும் இணையப்போவதில்லை எனவும் தெரிவித்தார்.

காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழான நேற்றைய (23) விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போது, “இந்த ஒழுங்கு விதிகள், நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் சமர்ப்பிக்கப்பட்ட ஒன்றா” எனவும் வினவினார். அமைச்சர் வாசுதேவவின் உரைக்கு இடையில், எதிர்க்கட்சி பக்கம் வந்து அமருமாறு அழைப்பு விடுக்கப்பட்டது. இதற்குப் பதிலளித்த அமைச்சர் வாசு, “நான் இப்போதும் அரசாங்கத்திலேயே இருக்கிறேன்” எனறார்.

# காணிகளை அமெரிக்காவுக்கு வழங்க ஜனாதிபதி அனுமதிக்க மாட்டார்



குடும்பத்தில் உள்ள ஆண் பிள்ளைகளுக்கு மாத்திரமே காணப்பட்ட காணி உரிமை, தற்போது சமர்ப்பிக்கப்பட்டுள்ள திருத்தத்தின் ஊடாக பெண் பிள்ளைகளுக்கும் உரிமை கோர முடியும் என காணி அமைச்சர் எஸ்.எம்.சந்திரசேன தெரிவித்தார்.

மேலும் நாட்டுக்கு சொந்தமான காணிகளை, காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகள் ஊடாக அமெரிக்காவுக்கு வழங்குவதற்கு ஜனாதிபதி ஒருபோதும் அனுமதிக்க மாட்டார் எனவும் தெரிவித்தார்.

காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழான 2251/48, 2262/50 மற்றும் 2266/5 இலக்க வர்த்தமானப் பத்திரிகையின் கீழ் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்குவிதிகளை நேற்றைய (23) பாராளுமன்ற அமர்வில் சமர்ப்பித்து உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

# “என்ன சொல்கிறீர்கள்”

எதிர்க்கட்சித் தலைவர் என்ன? சொல்கிறார் என்பதே புரியவில்லை எனத் தெரிவித்த ஆளும் கட்சியின் பிரதம கொறடாவான அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்ணான்டோ, எரிபொருள் இல்லையென்கிறார், எரிபொருள் திருட்டு நடக்கப்போகிறது என்றார். இன்னும் மூன்று நாடுகள் எரிபொருள் வழங்க தயாராக உள்ளன என்கிறார். இறுதியில் என்ன சொல்கின்றீர்கள் எனக் கேள்வியெழுப்பிய அவர், மூன்று நாடுகளில் இருந்து எரிபொருள் கிடைத்தால் வெற்றியாகும் என்றார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, கேட்ட கேள்விகளுக்கு பதிலளித்து உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

எரிபொருள் தருவதற்கு மூன்று நாடுகள் தயாராக இருந்தால், பெற்றுக்கொடுப்பதற்கு முயற்சி செய்யுங்கள், அப்போது, நாட்டையும் மக்களையும் நேசிக்கும் எதிர்க்கட்சித் தலைவர் என்று மக்கள் உங்களை போற்றுவார்கள். அரசியல் வேறுபாடுகள் இன்றி தனது நாட்டு மக்களைக் காக்க அர்ப்பணிப்புடன் செயல்பட்டாக கூறுவார்கள் என்றார்.

நீங்கள் எப்போது ஆட்சிக்கு வருவீர்கள் என எங்களுக்குத் தெரியாது. எனவே, ஆட்சியில் நீங்கள் இல்லாத நிலையில் இந்நாட்டு மக்களுக்கு இது போன்ற ஒன்றை செய்தால் மிகவும் நல்லது. உதவி செய்யுமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன். ஜே.வி.பி பிரச்சினை இருந்த போது திருமதி பண்டாரநாயக்க, ஜே.ஆர்.ஜெயவர்தனவுக்கும் உங்கள் தந்தைக்கும் உதவிய காலம் ஒன்று இருந்தது என, நினைவூட்டினார்.

அரசியல் பேதமின்றி இந்த நாடுகளுக்காக எண்ணெய் பிரச்சினையை தீர்க்குமாறு கேட்கிறோம். ஜனாதிபதி கோட்டாபயவால் எரிவாயு பிரச்சினையை தீர்க்க முடியவில்லை. எனவே நீங்கள் அந்த மரியாதையை எடுத்துக் கொள்ளுங்கள் என்றார்.

எப்போது நீங்கள் ஆட்சிக்கு வருவீர்கள் என்று தெரியாது. யார் திறமையானவர் திறமையற்றவர் என்பது தேர்தலில் முடிவு செய்யப்படும். யார் திறமைசாலி, யார் திறமையற்றவர் என்பது இரண்டு தேர்தல்களில் மக்கள் முடிவு செய்தனர். உங்களால் முடிந்தால் அந்த எரிபொருளை கொண்டு வாருங்கள் எனக் கேட்டார்.

# காணிகளை அபகரிப்பதில் பசில் கைதேர்ந்தவர்

காணிகளை அபகரிப்பதில் நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ கைத்தேர்ந்தவர் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் துசார இந்துனில் தெரிவித்தார்.

காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழான 2251/48, 2262/50 மற்றும் 2266/5 இலக்க வர்த்தமானப் பத்திரிகையின் கீழ் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்குவிதிகள் மீதான நேற்றைய (23) விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

> **“தற்போது முத்துராஜவல மூடப்பட்டுள்ளது. இதன் பின்னர் இது நட்டத்தில் இயங்கும் நிறுவனமாகக் காண்பித்து இதையும் விற்றுவிடுவார்கள். இந்து சமுத்திரத்தின் முத்து என்றே இலங்கையைக் கூறினார்கள். இப்போது எங்கே அந்த முத்து? தென் ஆசியாவில் காணிகளை விற்பனை செய்யும் இடமாக இலங்கை மாறியிருக்கிறது. பல நாடுகள் இலங்கையை கொள்ளையடித்து வருகின்றன**

இதன்போது தொடர்ந்து உரையாற்றிய அவர், பாரியளவில் காஸ் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. அதன் பின்னர் விலை அதிகரிக்கப்படுகிறது. தற்போது முத்துராஜவல மூடப்பட்டுள்ளது. இதன் பின்னர் இது நட்டத்தில் இயங்கும் நிறுவனமாகக் காண்பித்து இதையும் விற்றுவிடுவார்கள்.

இந்து சமுத்திரத்தின் முத்து என்றே இலங்கையைக் கூறினார்கள். இப்போது எங்கே அந்த முத்து? தென் ஆசியாவில் காணிகளை விற்பனை செய்யும் இடமாக இலங்கை மாறியிருக்கிறது. பல நாடுகள் இலங்கையை கொள்ளையடித்து வருகிறார்கள். நாட்டின் சொத்துகளை விற்கிறார்கள்.

இலங்கைக்கு சொந்தமான கடற் பரப்பு இந்தியாவுக்கு வழங்கப்பட்டுள்ளது.

நிதி அமைச்சர் காணி தொடர்பில் விசேட நிபுணர். காணிகளை பிடிப்பதில் அவருக்கு அதிக திறமை இருக்கிறது. மாத்தறையில் உள்ள பசிலின் இடம்தொடர்பில் வழக்கு தொடரப்பட்டுள்ளது எனவும் தெரிவித்தார்.

## கோட்டா, மஹிந்தவின்
# முள்ளிவாய்க்கால் கர்மாவை சிங்கள மக்கள் அனுபவிக்கிறார்கள்

முள்ளிவாய்க்காலில் உணவுக்காக வரிசையில் நின்ற குழந்தைகள், கர்ப்பிணிப் பெண்கள் மீது குண்டுகளை வீசிக்கொன்ற, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஸ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் பாவக் கர்மாவே, சிங்களவர்களையும் அத்தியாவசியப் பொருட்களுக்காக வரிசையில் நிற்க வைத்துள்ளதாக கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் ஸ்ரீதரன் தெரிவித்தார்.

காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழான 2251/48, 2262/50 மற்றும் 2266/5 இலக்க வர்த்தமானப் பத்திரிகையின் கீழ் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்குவிதிகள் மீதான நேற்றைய (23) விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்து உரையாற்றிய அவர், அத்தியாவசியப் பொருட்களுக்குக்கூட நாட்டு மக்கள் வரிசைகளில் நிற்கிறார்கள். இந்தப் பொருளாதார நெருக்கடியை தமிழ் மக்கள் 20 வருடங்களுக்கு முன்பே அனுபவித்து இருக்கிறார்கள்.

நாட்டில் நிலவும் கடதாசி தட்டுப்பாட்டால் பரீட்சைகளை நடத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளதோடு, பல பத்திரிகை நிறுவனங்களும் தங்களது பக்கங்களை குறைத்துள்ளன. 20 வருடங்களுக்கு முன்னர், இந்திய அமைதிப் படையினர் தமிழர் பகுதிகளுக்குள் வந்த போது, தமிழர்கள் இந்நிலைமைக்கு முகங்கொடுத்தனர்.

வரிசைகளில் நின்றவாறே மடிந்து விழுகிறார்கள். தமிழ் மக்களுக்கு இந்த வரிசைகள் புதிதல்ல. ஆனால், இப்போதே சிங்கள மக்கள் இதனை அனுபவிக்கிறார்கள். புலிகளின் தலைவர் பிரபாகரனின் காலத்தில் எவரும் பட்டினியால் உயிரிழக்கவில்லை; வரிசைகளில் நிற்கவில்லை. சிங்கள தலைவர்கள் எவரும் நேர்மையுடன் சிந்திக்க தயாராக இல்லை என்பதை சிங்கள மக்களுக்குக் கூற விரும்புகிறேன் என்றார்.

அத்தியாவசிய பொருட்களுக்காக வரிசையில் நின்ற நால்வர், இதுவரையில் உயிரிழந்துள்ளனர். இது நாட்டுக்கு வெட்கமில்லையா, கேவலமில்லையா எனவும் கடுமையாக சாடிய ஸ்ரீதரன் எம்.பி, பிரபாகரனிடம் நாட்டை கொடுத்திருக்கலாமென சிங்களவர்களே கூறுகின்றார்கள். சிங்கள மக்களின் நிலைமைக்கு நாம் அனுதாபங்களை தெரிவிக்கிறோம்.

தமிழ், சிங்களம் என்கிற இரு தேசிய இனங்களையும் அரவணைத்து செல்லக்கூடிய தலைவன் வராதவரையில், இந்நாடு இதைவிட மோசமான நிலைமைகளை சந்திக்கும் எனவும் எச்சரித்தார்.

மேலும், அதிகாரங்களை பகிர்ந்து சமஷ்டி அடிப்படையில் தீர்வை வழங்க கூடிய ஒரு சிங்கள தலைமகன் என்று வருகின்றானோ அன்றுதான் நாடு மீளும். அந்தச் சிங்கள மகன் மகாமனிதனாக மாறுவான். அவ்வாறான ஒரு சிங்கள மகனை உருவாக்க, சிங்கள மக்கள் முன்வரவேண்டும் என்றார்.

முன்னேற்றமடைந்துவரும் தமிழ்–முஸ்லிம்

# உறவை சீர்குலைக்கும் நடவடிக்கைகள்

■ வா. கிருஸ்ணா

மட்டக்களப்பில் முன்னேற்றமடைந்து வரும் தமிழ்-முஸ்லிம் மக்கள் மத்தியிலான உறவைச் சீர்குலைக்கும் வகையிலான நடவடிக்கைகளை, காத்தான்குடி நகர சபையின் தவிசாளர் முன்னெடுத்து வருவதாக, மட்டக்களப்பு மாநகர சபையின் மேயர் தி. சரவணபவன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாநகர சபையில் நேற்று (23) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்;

மட்டக்களப்பு மாநகர சபைக்கு உட்பட்ட பகுதிகளில், காத்தான்குடி நகர சபையின் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்ட முறைப்பாட்டையடுத்து, அப்பகுதிக்கு கள விஜயம் மேற்கொண்டிருந்தோம்.



இதன்போது, அது தொடர்பான தகவல்கள் கிடைக்கப்பெற்றன. நாங்கள் அப்பகுதி மக்களுக்கு தெளிவூட்டல்களை வழங்கினோம்.

“அத்துடன், காத்தான்குடி நகர சபைத் தவிசாளருக்கும் கடிதம் அனுப்பியிருந்தோம். ‘சட்டதிட்டங்களுக்கு எதிரான செயற்பாடுகள்’ எனக் கடிதத்தில் தெரிவித்திருந்தோம். ஆனால், எந்தவிதமான பதில்களும் வழங்கப்படவில்லை. காத்தான்குடி நகர சபைத் தவிசாளர், தனது செயற்பாட்டை தொடர்ந்து முன்னெடுத்து வருகின்றார்.

“இது தொடர்பில் கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர், கிழக்கு மாகாண ஆளுநர், உரிய அமைச்சுகளுக்கும் கடிதங்களை அனுப்பியுள்ளோம். இதற்கு மேலாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாநகர சபைக்கு உட்பட்ட பகுதிகளில், வரி அறிவீடு செய்வதற்கான முயற்சிகள் நடைபெற்றுள்ளன என்ற அடிப்படையில், காத்தான்குடி தவிசாளருக்கு எதிராகவும் அறிவிப்பு செய்த பள்ளிவாசல்களுக்கு எதிராகவும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

“இரண்டு இனங்களும் ஒன்றாக இணைந்து, தமது உரிமைகளையும் தேவைகளையும் பெற்றுக்கொள்ள முயற்சிகளை மேற்கொண்டுவரும் இந்தச் சந்தர்ப்பத்தில், இனமுரண்பாடுகளை ஏற்படுத்தி, மீண்டும் பிரிவுகளை ஏற்படுத்துவதற்கான முயற்சியாகவே இந்த அத்துமீறும் நடவடிக்கைகளைக் கருதவேண்டியுள்ளது” என்றார்.

வடக்கில் பட்டினிச் சாவுக்கு பயந்து மக்கள்

# தமிழகத்தில் தஞ்சம்

**மேலும் பலர் அகதிகளாக வரக்கூடும்**
**சர்வதேச கடல் எல்லையில் தீவிர கண்காணிப்பு**
**இதுவரை 16 பேர் படையெடுப்பு**

■ வி. நிதர்ஷன், லெம்பர்ட்



இலங்கையில் ஏற்பட்டுள்ள கடுமையான பொருளாதார வீழ்ச்சி காரணமாக, உணவு மற்றும் அத்தியாவசிய பொருட்களான குழந்தைகளுக்கான பால்மா, அரிசி, பருப்பு, கோதுமை, மண்ணெண்ணெய், டீசல், பெட்ரோல் உள்ளிட்ட பொருட்களின் கடும் விலை உயர்வு, தட்டுபாடு காரணமாக, இலங்கையில் வாழும் மக்கள், தமிழகத்துக்கு அகதிகளாகப் படையெடுக்கத் தொடங்கியுள்ளனர்.

இந்நிலையில், திங்கட்கிழமை (21) காலை 9 மணியளவில் மன்னார் மாவட்ட கடற்கரையில் இருந்து, தனது சொந்த பைபர் படகில் ஐந்து குழந்தைகள், மூன்று பெண்கள், இரண்டு ஆண்கள் என இரு குடும்பத்தை சேர்ந்த 10 பேர் தனுஸ்கோடிக்குச் சென்றுள்ளனர்.

நடுக்கடலில் படகின் இயந்திரத்தில் ஏற்பட்ட பழுது காரணமாக கடும் வெயிலில் உணவு, தண்ணீர் இன்றி சுமார் 37 மணி நேரத்துக்கும் மேலாக குழந்தைகளுடன் நடுக்கடலில் தத்தளித்தளித்த நிலையில், பல மணி நேர முயற்சிக்கு பின்னர் இயந்திரம் சரி செய்யப்பட்டு, செவ்வாய்கிழமை இரவு எட்டு மணியளவில் தனுஷ்கோடி வடக்கு பாலம் மீன்பிடித் துறைமுகத்தை சென்றடைந்துள்ளனர்.

யுத்தகால இடம்பெயர்வுக்குப் பின்னர், தற்போது உணவு பஞ்சத்தால் பட்டினிச் சாவுக்கு பயந்து, குழந்தைகளோடு மீண்டும் அகதிகளாக தனுஸ்கோடிக்கு மக்கள் பயணிக்கின்றனர்.

செவ்வாய்கிழமை காலை முதல் இரவு வரை 16 இலங்கை தமிழர்கள் அகதிகளாக தனுஷ்கோடிக்கு சென்றுள்ளனர்.

மேலும் பலர் அகதிகளாக தனுஸ்கோடிக்கு வரக்கூடும் என்பதால், சர்வதேச கடல் எல்லை பகுதியில் கண்காணிப்பை தீவிரப்படுத்த கடல் பாதுகாப்பு அதிகாரிகள் திட்டமிட்டுள்ளதாக, இந்திய தகவல் தெரிவிக்கின்றன.





பொத்துவில், தாமரைக்குளம் கிராமத்தில்

# காட்டு யானை அட்டகாசம்

■ எம்.எஸ்.எம். ஹனீபா

பொத்துவில், தாமரைக்குளம் கிராமத்துக்குள் நேற்று முன்தினம் (22) இரவு புகுந்த காட்டு யானை, வீடொன்றை முற்றாகச் சேதமாக்கியுள்ளது.

பொத்துவில் பிரதேசத்துக்குட்பட்ட சர்வோதையபுரம், செங்காமம் ஆகிய பிரதேசங்களில் அண்மைக் காலமாக காட்டு யானைகளின் தொல்லை அதிகரித்துக் காணப்படுவதால், மாலை நேரங்களில் தங்கள் குடியிருப்பை விட்டு வெளியேறி, தமது குழந்தைகளுடன் பாதுகாப்பான இடங்களுக்கு சென்று காலையில் வீடு திரும்பும் நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

யானைகளின் தொல்லையைக் கட்டுப்படுத்த சம்மந்தப்பட்ட அதிகாரிகள் இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லையென பொது மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக வன ஜீவராசிகள் திணைக்களத்தின் அதிகாரிகள், உள்ளூராட்சி மன்றங்களின் பிரதிநிதிகள் ஆகியோர் நடவடிக்கை எடுக்க வேண்டுமென பொது மக்கள் கேட்டுள்ளணர்.

# போதைப்பொருளுடன் ஒருவர் கைது

■ ரீ.எல். ஜவ்பர்கான்

மட்டக்களப்பு, காத்தான்குடி பொலிஸ் பிரிவில் 9 கிராம் 650 மில்லி கிராம் ஐஸ் போதைப்பொருளுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என மட்டக்களப்பு மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு பொறுப்பதிகாரி பி.எஸ். பி.பண்டார தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சுதத் மாசிங்கவின் வழிகாட்டலில், காத்தான்குடி கடற்கரை வீதியில் நேற்று முன்தினம் (22) இரவு 10 மணியளவில் மேற்கொண்ட திடீர் சுற்றிவளைப்பின்போது இவர் கைது செய்யப்பட்டார்.



# புதிய உறுப்பினராக சத்தியப்பிரமாணம்

■ சகா



மண்முனை, தென் எருவில்பற்று பிரதேச சபையின் புதிய உறுப்பினராக சுயேச்சைக் குழு உறுப்பினரான தங்கராசா ரவீந்திரன், இன்று (24) சத்தியப் பிரமாணம் செய்து கொள்கிறார்.

மண்முனை தென் எருவில் பற்று பிரதேச சபை தவிசாளர் டா. யோகநாதன் தலைமையில் நடைபெறும் 49ஆவது மாதாந்த அமர்வு இன்று இடம்பெறவுள்ளது.

சுயேச்சைக் குழுவில் ஏற்கெனவே உறுப்பினராக இருந்த தியாகராசா தேவரஞ்சன் காலமாகியதை அடுத்து, அவ்விடத்துக்கு புதிய உறுப்பினராக தங்கராசா ரவீந்திரன் தேர்தல் ஆணையாளரால் நியமிக்கப்பட்டிருந்தார்.









# சவாரித் திடல் திறப்பு

முல்லைத்தீவு, வற்றாப்பளை, நந்திக்கடல் கரையில் அமையப்பெற்ற கண்ணகி மாட்டுவண்டி சவாரித்திடல் திறப்புவிழா, நேற்று முன்தினம் (22) மாலை நடைபெற்றது. முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் க. சிவமோகன், முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் க. விமலநாதன், கரைதுறைப்பற்று பிரதேச சபை தவிசாளர் க. விஜிந்தன், கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் ம. உமாமகள் உட்பட பலர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

சவாரித திடல் திறப்பு நிகழ்வைத் தொடர்ந்து, வடமாகாண மாட்டுவண்டி சவாரியாளர்கள் கலந்துகொண்ட மாட்டுவண்டி சவாரி நடைபெற்றது. இதில் வட மாகாணத்தைச் சேர்ந்த 72 சோடி மாடுகள் பங்குபற்றியிருந்தன.

செ. கீதாஞ்சன்

காச நோயால்

# வவுனியாவில் 15 பேர் மரணம்

■ க. அகரன்



வவுனியா மாவட்டத்தில் கடந்த இரண்டு வருடங்களில் காச நோயால் 100 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன், 15 பேர் மரணமடைந்துள்ளனர் என வவுனியா மாவட்ட காசநோய் கட்டுப்பாட்டு வைத்திய அதிகாரி கே.சந்திரகுமார் தெரிவித்தார்.

வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையின் மார்பு நோய் சிகிச்சை நிலையத்தில் நேற்று (23) நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே, இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

“உலக காசநோய் தினம், ஒவ்வொரு வருடமும் மார்ச் மாதம் 24ஆம் திகதி அனுஸ்டிக்கப்படுகின்றது. இம்முறை, ‘காசநோயை இல்லொதொழிப்பதற்கு முதலிடுவதன் மூலம், உயிர்களை காப்பாற்றுவோம்’ எனும் தொனிப்பொருளில் உலக காசநோய் தினம் அனுஸ்டிக்கப்பட உள்ளது.

அதனையொட்டி வவுனியா மாவட்ட காச நோய் தடுப்பு பிரிவில் விழிப்புனர்வு செயலமர்வும், பொதுமக்களுக்கான விழிப்புணர்வு நடை பவனியும் இன்று (24) நடைபெறவுள்ளது.

“வவுனியா மாவட்டத்தில் ஒரு வருடத்தில் 80 தொடக்கம் 90 பேர் வரை காச நோயாளர்களாக இனங்காணப்படுகின்றனர். இம்மாவட்டத்தில் 2021ஆம் ஆண்டு 52 பேரும் 2020ஆம் ஆண்டு 47 பேரும் இனங்காணப்பட்டுள்ளனர்.

“அத்துடன், 2021ஆம் ஆண்டு இந்நோயால் 08 பேரும், 2020ஆம் ஆண்டு 07 பேரும் மரணமாகியுள்ளனர். இந்த மரணங்களுக்கு காலம் தாழ்த்தி சிகிச்சை பெற்றுக்கொண்டமை முக்கிய காரணமாகும். இந்நோயைப் பொறுத்த வரை, ஆரம்ப நிலையில் சிகிச்சை பெறுமிடத்து இவ்வாறான இறப்புகளைத் தடுக்க முடியும்” என்றார்.

பிரச்சினைகளுக்கு

# தீர்வு கோரிய விவசாயிகள்

■ நூருல் ஹுதா உமர்





சம்மாந்துறை, கல்முனை நீர்ப்பாசன பிரிவுக்கான 2022ஆம் ஆண்டின் சிறு போகத்துக்கான கால அட்டவணையும் நிறைவேற்று தீர்மானங்கள் நிறைவேற்றும் கூட்டமும், சம்மாந்துறை அப்துல் மஜீத் மண்டபத்தில் நேற்று முன்தினம் (22) மாலை, அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் ஜே.எம்.ஏ. டக்லஷ் தலைமையில் ம் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் ஆரம்ப வேலைகளுக்கான காலம், விதைப்புக்காலம், விதைக்கும் நெல்லினம், பயிர்க் காப்புறுதி, நீர் விநியோகம், மாடுகளின் அப்புறப்படுத்துகை, கிளை வாய்க்கால் பேணுகை, தந்தங்கள், கூலிகள், யானை பிரச்சினைகள், டீசல், யூரியா பசளை கிடைப்பதில் உள்ள பிரச்சினைகள் அதனால் விவசாயிகள் எதிர்நோக்கும் சவால்கள் போன்ற விடயங்கள் தொடர்பில் விவசாயிகள் எடுத்துரைத்த ஆலோசனைகள் தொடர்பில் ஆராயப்பட்டு, தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டன.

வீதியை புனரமைக்குமாறு

# வீதி மறியல் போராட்டம்

■ மு. தமிழ்ச்செல்வன்




கிளிநொச்சி, பூநகரி, கிராஞ்சி, வேரவில் வீதியை புனரமைத்துத் தருமாறு கோரி, பொதுமக்கள் நேற்று முன்தினம் (22) வீதி மறியல் போராட்டத்தில் ஈடுப்பட்டனர்.

யாழ்ப்பாணம் - மன்னார் ஏ32 வீதியை பல்லவராயன்கட்டு பகுதியில் மறித்து கிராஞ்சி, வேரவில் மற்றும் வலைப்பாடு போன்ற கிராம மக்கள் இப்போராட்டத்தில் ஈடுப்பட்டனர்.

மாவட்டத்தின் ஏனைய பகுதிகளுக்கான தொடர்புகளுக்கு பிரதான வீதியாக காணப்படுகின்ற 22 கிலோ மீற்றர் நீளமான பல்லவராயன்கட்டு தொடக்கம் கிராஞ்சி, வேரவில் வரை செல்கின்ற வீதி, மிக மோசமாக நிலையில் காணப்படுவதாக மக்கள் சுட்டிக்காட்டினார்கள்.

எனவே, பொதுமக்களின் சிரமங்களைக் கருத்தில்கொண்டு, குறித்த வீதியை புனரமைக்க விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென மக்கள் வலியுறுத்தினர்.

இதன்போது, அங்கு வருகை தந்திருந்த மாவட்டச் செயலகம் மற்றும் பூநகரி பிரதேச செயலக அதிகாரிகள், பொதுமக்களுடன் கலந்துரையாடியதைத் தொடர்ந்து மகஜரும் கையளிக்கப்பட்ட நிலையில், போராட்டம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது.

**“ 22 கிலோ மீற்றர் நீளமான பல்லவராயன்கட்டு தொடக்கம் கிராஞ்சி, வேரவில் வரை செல்கின்ற வீதி, மிக மோசமாக நிலையில் காணப்படுகிறது**

மரக்கறி உற்பத்தியாளர்களின்

# வாழ்வாதாரம் பாதிப்பு

■ பி.கேதீஸ்

நுவரெலியா மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் உருளைக்கிழங்கு, மக்கறிகளை விற்பனை செய்து கொள்ள முடியாமல், விவசாயிகளும் மரக்கறி வியாபாரிகளும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக விவசாயிகளும் வியாபாரிகளும் தெரிவிக்கின்றனர்.

டீசல் தட்டுபாட்டால் வெளிமாவட்டத்திலுள்ள வியாபாரிகள், மரக்கறிகளை கொள்வனவு செய்வதற்கு நுவரெலியா விசேட பொருளாதார மத்திய நிலையத்திற்கு வருவதில்லை. இதனால் மரக்கறி விலையிலும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

இதேவேளை மரக்கறி




உற்பத்தியில் ஈடுபடும் விவசாயிகளும் உற்பத்தி செய்யும் மரக்கறிகளை விற்பனை செய்ய முடியாமல் அவஸ்தைப்படுகின்றனர்.

அத்தோடு, மரக்கறி தோட்டங்களிலும் மரக்கறி வியாபாரிகளிடம் தொழில்புரியும் தொழிலாளர்களும் தொழில் இல்லாமல் கஷ்டப்படுகின்றனர்.

இது இவ்வாறிருக்க, தற்பொழுது நாட்டில் ஏற்பட்டுள்ள எரிப்பொருள் தட்டுப்பாடு, சமையல் எரிவாயு நெருக்கடி காரணமாக மரக்கறி உற்பத்தியாளர்களும் மரக்கறி வியாபாரிகளும் 60 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்து பாதிக்கப்பட்டுள்ளனர்.

சமையல் எரிவாயு தட்டுப்பாடு காரணமாக பல இடங்களில் உணவங்களிலும் சுற்றுலா விடுதிகளிலும் உணவு மற்றும் தேநீர் வழங்க முடியாமல் உணவகங்களும் ஹோட்டல்களும் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளன. இதனால் சந்தைக்கு காய்கறிகளை கொள்வனவு செய்வதற்கு ஹோட்டல் துறைசார்ந்தவர்கள் வருவதில்லை. மரக்கறி உற்பத்தியாளர்கள், வியாபாரிகள் பாரிய பொருளாதார சிக்கல்களை எதிர்நோக்குவதாக தெரிவிக்கின்றனர்.



ஈஸி கேஸ் முறையில் போதைப் பொருள் விற்பனை

## ஹட்டனில் எட்டு பேர் கைது

■ ரஞ்சித் ராஜபக்‌ஷ

'ஈசி கேஸ்' முறையில் போதைப்பொருள் வர்த்தகத்தில் ஈடுபட்ட 8 இளைஞர்கள் ஹட்டன் கலால் அலுவலக அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர்கள் 20- 30 வயதுக்குட்பட்டவர்கள் என்பதுடன், இவர்கள் ஹட்டன், தலவாக்கலை, கொட்டகலை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என்றும் தெரியவந்துள்ளது.

சந்தேக நபர்கள் குறித்த பிரதேசங்களைச் சேர்ந்த இளைஞர்களுக்கு ஈஸி கேஸ் மூலம் ஹெரோய்ன், கஞ்சா போன்ற போதைப் பொருட்களை விற்பனை செய்து வந்துள்ளதுடன், இவர்களில் ஐவரிடமிருந்து 1,170 மில்லி கிராம் ஹெரோய்னும் ஏனைய மூவரிடமிருந்து 4,800 மில்லி கிராம் கஞ்சாவும் கைப்பற்றப்பட்டுள்ளதாக கலால் அலுவலக அதிகாரிகள் தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர்களை ஹட்டன் நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளனர்.

தலவாக்கலை– லிந்துலை நகர சபைக்கு

## புதிய தவிசாளர்

■ தலவாக்கலை நிருபர்கள்



தலவாக்கலை-லிந்துலை நகர சபையில் தவிசாளர் பதவிக்கு, நகர சபையின் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன கட்சியின் உறுப்பினரான சந்தன பிரதீப் குணதிலக நியமிக்கப்பட்டுள்ளார்.

மத்திய மாகாண உள்ளூராட்சி மன்றங்களின் ஆணையாளர் மேனக ஹேரத் தலைமையில், நேற்று (23) நடைபெற்ற கூட்டத்திலேயே, தெரிவு செய்யப்பட்டார்.

தலவாக்கலை-லிந்துலை நகர சபையின் உறுப்பினரான பிரசன்ன விதானகேயால், சந்தன பிரதீப்பின் பெயர் முன்மொழியப்பட்டதுடன், நகர சபையின் உப தவிசாளர் எல். பாரதிதாசனால் அப்பெயர் வழிமொழியப்பட்டது.

## நடுவீதியில் தோன்றிய குழி

■ மொஹொமட் ஆஸிக்



கண்டி - யாழ்ப்பாணம் -ஏ, 09 வீதியின் அக்குறணை நகரின் ஒரு பகுதி திடீரென தாழிறங்கியுள்ளது.

வீதியின் குறித்த பகுதியில் நேற்று முன்தினம் (22) இரவு திடீரென குழியொன்று உருவாகியுள்ளதுடன், வீதியும் சுமார் மூன்று அடி அளவில் தாழிறங்கியுள்ளது.

வீதி தாழிறங்கியமை தொடர்பில், வீதிஅபிவிருத்தி அதிகார சபையின் அதிகாரிகள் ஆராய்ந்து வருகின்றனர்.





## மஹா கும்பாபிஷேகம்

நாட்டுக்கோட்டை நகரத்தார் கம்பளை அருள்மிகு ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி கோவிலின் மஹா கும்பாபிஷேகம் நேற்று (23) நடைபெற்றது.

எஸ். யோகா



## காத்திருந்தவர்களுக்கு இலைக்கஞ்சி



■ நீலமேகம் பிரசாந்த்

எரிபொருளுக்காக காத்திருப்பவர்களுக்கு இலவசமாக இலைக்கஞ்சி வழங்கும் நிகழ்வு, நேற்று (23) நுவரெலியா நகரில் நடைபெற்றது.

எரிபொருள் தட்டுபாட்டால் நுவரெலியா நகரில், நேற்று (23) அதிகமான வாகன நெரிசல் ஏற்பட்டதோடு, அதிகாலையில் இருந்து எரிபொருளுக்காக பொதுமக்களும் எரிபொருள் நிலையத்தில் காத்துக்கிடந்தனர்.

இதனையடுத்து, நுவரெலியா நகரத்தில் உள்ள சமூக சேவையாளர்களால், இவ்வாறு இலவசமாக இலைக்கஞ்சி வழங்கி வைக்கப்பட்டது.

சர்வகட்சி மாநாடு:

## "போன பஸ்ஸுக்கு கைகாட்டும் வேலை"

அரசாங்கத்தின் சர்வகட்சி மாநாடு, பஸ் போன பிறகு கைகாட்டும் வேலை ஆகும் என ஜனநாயக மக்கள் முன்னணியின் பிரதி தலைவரும், தமிழ் முற்போக்கு கூட்டணியின் கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான வேலு குமார் தெரிவித்தார்.

கண்டியில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர், "இன்றைய அரசாங்கம், ஆரம்பம் முதல் இன்று வரை ஒரு தீர்மானத்தைக் கூட, உரிய நேரத்தில் எடுக்கவில்லை. இன்று நாட்டின் பொருளாதாரம் சீரழிந்து நிற்கின்றது. முழு நாடும் கறுப்பு சந்தையாக மாறி இருக்கின்றது. மொத்த பொருளாதாரமும் மீள கட்டியெழுப்ப முடியாத நிலைக்கு தள்ளப்பட்டு இருக்கின்றது.

இந்நிலைமை ஏற்படாமல் இருப்பதற்கு அரசாங்கத்திடம் பல மாதங்களுக்கு முன்னரே பல வேண்டுகோள்கள் முன்வைக்கப்பட்டன. ஆனால், அரசு அவற்றைக் கண்டுகொள்ளவில்லை; செவிமடுக்கவில்லை; தான்தோன்றித்தனமாக நடந்துகொண்டது.

சர்வகட்சி மாநாட்டைக் கூட்டுவது, பஸ் போன பிறகு கைக்காட்டும் வேலையாகும். நாட்டின் பொருளாதாரத்துக்குச் செய்யக்கூடிய அனைத்து மோசமான நடவடிக்கைகளையும் செய்துவிட்டனர். கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு, 2,000 பில்லியனுக்கு அதிகமான பணம் அச்சிட்டுவிட்டனர்.

அதுவே ரூபாயின் கொள்வனவு சக்தியை வீழ்த்திவிட்டது. அதுமட்டுமல்லாமல், அமெரிக்க டொலர் ஒன்றின் பெறுமதியை ரூபாய் 200 ஐ விட அதிகரிக்க விட மாட்டோம் என்று அடம் பிடித்தனர். பொருளாதார நிலைமைகளை மீறி கட்டுப்படுத்தினர். அதன் மூலம் தங்களைச் சுற்றியுள்ளவர்களுக்கு லாபம் உழைக்க வழிசமைத்து கொடுத்தனர். டொலர் பிரச்சினை மேலும் நெருக்கடிக்கு உள்ளானது. கடன் சுமையை மீள கட்டமைக்குமாறு கேட்டோம். அதனையும் செய்யவில்லை. இன்று அனைத்தையும் முடித்துவிட்டு, சர்வ கட்சி மாநாடு என்கிறார்கள். இதுவும் ராஜபக்ஷர்களின் வெறும் மூடி மறைப்பு நாடகமே ஆகும்" என்றார்.



நாட்டின் தற்போதைய நிலையில்

## பெருந்தோட்ட மக்களுக்கே அதிகம் பாதிப்பு

நாட்டின் பொருளாதார சீரற்ற நிலைமை காரணமாக, பெருந்தோட்ட மக்கள் ஏனைய மக்களை விட பெரிதும் பாதிப்படைந்துள்ளனர் என்று தொழிலாளர் தேசிய சங்கத்தின் பிரதி நிதிச்செயலாளரும் மத்திய மாகாண சபையின் முன்னாள் உறுப்பினருமான சோ. ஸ்ரீதரன் தெரிவித்தார்.

தொழிலாளர் தேசிய சங்கத்தின் பொகவந்தலாவை பிரதேச தோட்டக் கமிட்டி தலைவர்களுக்கான கூட்டத்தில் கலந்து கொண்டு பேசிய போதே இவ்வாறு அவர் தெரிவித்தார்.

**"தோட்டத் தொழிலாளர்களுக்கு கோதுமை மா நிவாரணம் வழங்கப்படுவதாக கூறப்பட்ட போதும் தற்போது அந்த நிவாரணம் இடை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. மலையகத்தில் போலியான அபிவிருத்தியே இடம்பெற்று வருகின்றது**

தொடர்ந்து தெரிவித்த அவர்;

தற்போதைய அரசாங்கத்தின் முறையற்ற பொருளாதாரக் கொள்கை, நிர்வாக செயற்பாடுகள் காரணமாக, எமது நாடு வங்குரோத்து நிலையை அடைந்துள்ளது. எரிபொருள், அத்தியாவசியப் பொருட்களுக்கும் என்றுமில்லாதளவு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இவ்வாறானதொரு நிலையில், எத்தகைய வருமானமுமின்றி வாழ்கின்ற பெருந்தோட்டத் தொழிலாளர்களும் அவர்களைச் சார்ந்த குடும்பத்தினரும் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

தோட்டத் தொழிலாளர்கள் குறைந்த வருமானத்தையே தற்போதும் பெற்று வருகின்றனர். அந்த வருமானத்தைக் கொண்டு தற்போதைய வாழ்க்கைச் செலவை ஈடுசெய்ய முடியாது தத்தளிக்கின்றனர்.

தோட்டத் தொழிலாளர்களுக்கு கோதுமை மா நிவாரணம் வழங்கப்படுவதாக கூறப்பட்ட போதும் தற்போது அந்த நிவாரணம் இடை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. மலையகத்தில் போலியான அபிவிருத்தியே இடம்பெறுகின்றது.

இன்றைய முறையற்ற அரசாங்கத்துக்கு எதிராக, நாட்டு மக்கள் அணிதிரண்டு போராடி வருகின்றனர் என்றார்.

## விவசாயத்தை கைவிட வேண்டிய நிலை ஏற்படலாம்

### மலையக விவசாயிகள் எச்சரிக்கை

■ மலைவாஞ்ஞன்

நுவரெலியா மாவட்டத்தில் விவசாயத்தில் ஈடுபடுபர்களுக்கு உரம், மருந்துகள் கிடைக்காததன் காரணமாக, விவசாயத்தினை கைவிட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

விவசாயத்தில் ஈடுபடுபவர்களுக்கு உரம், மருந்து வகைகள் உரிய நேரத்தில் கிடைக்காததன் காரணமாக, அதிக விலை கொடுத்து இவற்றைப் பெற வேண்டியிருப்பதாலும் இவர்கள் பாரிய நட்டத்தை எதிர்நோக்கியுள்ளதாகவும் தெரிவிக்கின்றனர்.



தற்போது ஒரு சில கடைகளில் ஒரு மூட்டை உரம் 13 ஆயிரம் தொடக்கம் 18 ரூபாய் வரை விற்கப்படுவதால் தங்களுக்குத் தேவையான உரத்தைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலை உருவாகியிருப்பதாகவும் இதனால் தங்களது வாழ்வாதாரம் பாரிய அளவில் பாதிப்புக்குள்ளாகி இருப்பதாகத் தெரிவிக்கின்றனர்.

அதிக விலை கொடுத்து உரத்தையும் மருந்தையும் வாங்கி உற்பத்தியில் ஈடுபட்டாலும் அவற்றை நட்டத்திலேயே கொடுக்க வேண்டி ஏற்படுவதால் எதிர்காலத்தில் விவசாயத்தை கைவிட வேண்டிய நிலை ஏற்படுவதாகவும் தெரிவிக்கின்றனர்.

மருந்தும் உரமும் இல்லாததன் காரணமாக, பீடைகளின் தாக்கங்களும் அதிகரித்துள்ளன. இதனால் உள்ள பயிர்களும் வீணாகும் நிலை உருவாகியுள்ளன.

எனவே இதற்குரிய தீர்வை அரசாங்கம் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

6 ஆசிரியர்

வியாழக்கிழமை, 24 மார்ச் 2022 

# பஞ்சத்துக்கு அஞ்சி தமிழகத்தில் தஞ்சமடையும் அவல நிலைமை

எதிர்காலத்தின் மீதான அச்சம், ஒவ்வொரு மனிதரிடத்திலும் மிகவும் ஆழமாக ஊடுருவி, குடைந்துகொண்டிருக்கின்றது. அதனால், பல கோணங்களில் சிந்தித்து, தீர்மானம் எடுக்கவேண்டிய நிலைமையில் உள்ளனர். சிலர், இருப்பதைக்கொண்டு வாழ்க்கையை வடிவமைத்துக்கொள்வர். இன்னும் பலர், இருப்பதை விட்டுவிட்டு, பறப்பதற்கு ஆசைப்பட்டு, இருப்பதையும் இழந்துவிடுவர்.

இன்னும் சிலர், வாழ்க்கையின் இறுதி இதுவென நினைத்து, இடைநடுவிலேயே முறித்துக்கொள்வர். அவ்வாறானவர்கள் வாழ்வதற்குத் தகுதி இல்லாதவர்கள்; பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க அஞ்சி, புறமுதுகு காட்டிக்கொண்டு ஓடுபவர்கள்; திராணியற்றவர்கள்.

வாழ்க்கையோட்டத்தில் கரடுமுரடுகள் இருக்கத்தான் செய்யும். மேடு, பள்ளங்களைச் சந்திக்கவே வேண்டும். இவையெல்லாம் ஒவ்வொருவருக்கும் பல அனுபவ பாடங்களைக் கற்றுக்கொடுக்கின்றன. பிரச்சினைகளைச் சந்திக்காதவர்கள் எவரும், புதிய தேடல்களுக்கு முயற்சி செய்வதில்லை. 'விழுந்தவன், விழுந்தே கிடப்பதுதான் முட்டாள்தனம்; எழுந்து எழுந்து, விழுந்து விழுந்து எழவேண்டும். அப்போதுதான், தன்னைத்தானே நன்றாகச் செதுக்கிக்கொள்வர்.

எனினும், வாழவேண்டும் என்பதற்காக பலரும் பல முயற்சிகளை எடுத்துக்கொண்டுதான் இருக்கின்றனர். யாரும் வெளிக்காட்டாவிடினும், நாட்டில் பஞ்சம் மறைமுகமாக ஏற்பட்டுள்ளது. பொருட்களின் விலைகள் வானத்தை எட்டிநிற்கின்றன. வேலைவாய்ப்பின்மை அதிகரித்துவிட்டது. கூலி வேலைக்குக் கூட யாருமே கூப்பிடுவதில்லை.

இந்நிலையில்தான், வடக்கைச் சேர்ந்த இரண்டொரு குடும்பங்கள், தமிழ்நாட்டுக்கு அகதிகளாச் சென்றுள்ளன. ஒரு நாட்டிலிருந்து மற்றொரு நாட்டுக்குள் சட்டவிரோதனமாக நுழைவது குற்றமாகும். கடவுச்சீட்டு சட்டத்தின் கீழ், அவர்கள் தடுத்துவைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றார்கள். அந்தளவுக்கு இலங்கையில் பஞ்சம் தலைவிரித்தாடுகின்றது.

ஆனால், அவ்வாறு சென்றவர்களின் பயணம், மிகவும் ஆபத்து நிறைந்ததாகக் காணப்பட்டுள்ளது. குடும்பத்தை காப்பாற்றுவதாக நினைத்து, குடும்பத்தையே இழந்து நின்றிருக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கும். ஆக, சட்டவிரோதமான கடல்வழி பயணங்களைத் தவிர்ப்பதே உசிதமானது.

நமது நாட்டுக்கு வருகை தந்திருக்கும் சுற்றுலாப் பயணிகளும், மின்சாரம் இன்றி இருட்டில் இருக்கின்றனர். போத்தல்களில் எரிபொருட்களைக் கொள்வனவு செய்துகொண்டு செல்கின்றனர். உணவுத் தட்டுப்பாட்டுக்கும் முகங்கொடுத்துள்ளனர்.

உக்ரேன் மீது, ரஷ்யா போர் தொடுத்தமையால் இங்கு சிக்கிக்கொண்ட உக்ரேன், ரஷ்ய பிரஜைகளும் கடும் சிரமங்களுக்கு முகங்கொடுத்துள்னர்.

நீண்டகாலத் திட்டமின்மையால், நாடு பெரும் நெருக்கடிக்கு முகங்கொடுத்துக் கொண்டிருக்கின்றது என்பதை சகலரும் கவனத்தில் கொண்டு, இப்பிரச்சினையை வைத்து, குளிர்காய்ந்து விடாமல், தீர்வு காண்பதற்குக் கடுமையாக முயலவேண்டும். இல்லையேல், இன்னும் அதல பாதாளத்துக்குள் நாமெல்லோரும் விழுந்துவிடும் அபாயம் காத்திருக்கிறது.

நாடு முகங்கொடுத்திருக்கும் இந்த நெருக்கடி, இன்னும் சில வருடங்களுக்கு நீடிக்குமென்றே கூறப்படுகின்றது. அதிலிருந்து உடனடியாக மீண்டெழுந்து உயிர்வாழ்வதற்கான, மாற்றுவழிகளை ஆட்சியாளர்கள் உருவாக்கவேண்டும்.

இல்லையேல் பஞ்சம் ஏற்படுவதையும் அகதிகளாகத் தஞ்சமடைவதையும் தவிர்க்க முடியாது என்பதை, எச்சரிக்கை உணர்வுடன் நினைவூட்டுகின்றோம்.




தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk





# ராஜபக்‌ஷர்களின் ஆட்சியில் மீண்டும் செத்து விழும் மக்கள்



**புருஜோத்தமன் தங்கமயில்**

எரிபொருள் நிரப்பு நிலையங்கள், சமையல் எரிவாயு விற்பனை நிலையங்கள் ஆகியவற்றைப் பொதுமக்களிடம் இருந்து பாதுகாக்கும் பொறுப்பை, துப்பாக்கி ஏந்திய இராணுவத்தினரிடம் ராஜபக்‌ஷர்களின் அரசாங்கம் வழங்கி இருக்கின்றது.

கடந்த சில வாரங்களாக, நாடு பூராவும் எரிபொருள் நிரப்பு நிலையங்களிலும் சமையல் எரிவாயு விற்பனை நிலையங்களிலும், நீண்ட வரிசையில் மக்கள் காத்துக் கிடக்கிறார்கள். இப்படி வரிசையில் காத்திருந்த மூன்று பேர் இதுவரையில் மரணித்திருக்கிறார்கள். ஆனாலும், எரிபொருள் விநியோகமோ, எரிவாயு விற்பனையோ சீராகவில்லை.

இதனால், நாடு பூராகவும் மக்கள் வீதிகளில் இறங்கி போராடத் தொடங்கிவிட்டார்கள். "ஆட்சியைவிட்டு, உடனடியாக ராஜபக்‌ஷர்கள் வெளியேற வேண்டும்" என்கிற குரல்களை, மக்கள் பலமாக எழுப்புகிறார்கள்.

இவ்வாறான நிலை இப்படியே தொடர்ந்தால், நாடு பூராகவும் ராஜபக்‌ஷர்களுக்கு எதிரான எழுச்சி என்பது, கட்டுப்படுத்த முடியாதளவுக்கு அதிகரித்துவிடும் என்ற பயத்தில், மக்கள் எங்கெல்லாம் வரிசையில் காத்திருக்கிறார்களோ, அங்கெல்லாம் இராணுவத்தினரை இறக்கியுள்ளார்கள்.

தேசிய பாதுகாப்புக் கடமைகளுடன் இயற்கை பேரிடர்கள் போன்ற ஆளணி அவசியமுள்ள அசாதாரண சந்தர்ப்பங்களில் மட்டும் இராணுவம் உள்ளிட்ட பாதுகாப்பு தரப்பினரை, அரசாங்கங்கள் முன்னரங்குக்கு அழைப்பதுண்டு. ஆனால், இலங்கையில்தான் மக்களின் ஜனநாயகப் போராட்டங்களை அடக்கவும், மக்களின் நிலங்களை ஆக்கிரமித்து விவசாயம் செய்யவும், வீதியோர மரங்களை அழகுபடுத்தவும் இராணுவத்தினர் அழைக்கப்படுகின்றனர்.

தற்போதும் அப்படித்தான்! எரிபொருள் விற்பனை நிலையங்களைச் சுற்றி இராணுவத்தினர் நிறுத்தப்பட்டு இருக்கிறார்கள்.

தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடி பேரிடர்தான். இதை எந்தவித இயற்கை அனர்த்தங்களும் ஏற்படுத்தவில்லை. மாறாக, சுதந்திர இலங்கையை ஆண்ட அரசாங்கங்கள், திட்டமிட்டு ஏற்படுத்திவிட்ட பொருளாதார 'திவால்' என்னும் பேரிடர் இதுவாகும்.

டி.எஸ்.சேனநாயக்க தொடங்கி, கோட்டாபய ராஜபக்‌ஷ வரையான ஆட்சியாளர்கள், இந்த வங்குரோத்து நிலைக்கு பொறுப்புக் கூற வேண்டியவர்களாவர். அதிலும் ராஜபக்‌ஷர்களுக்கு கூடுதல் பொறுப்பு இருக்கின்றது.

மஹிந்த ராஜபக்‌ஷ ஆட்சிக் காலத்தில், வெளிநாடுகளில் குறிப்பாக, சீனாவிடம் பில்லியன் டொலர் கணக்கில் கடனைப் பெற்று, எந்தவித வருமானமும் தராத தாமரைக் கோபுரம் போன்ற ஆடம்பர அலங்கார கட்டுமானங்களைச் செய்தார்கள். அந்தக் கடன்களை திருப்பிச் செலுத்துவதற்கு மீண்டும் கடன்களை வாங்கிக் குவித்துக் குவித்து, இலங்கையில் இனி பிறக்கப்போகும் பல தலைமுறைகளின் தலைகளிலும் கடன் சுமையை ஏற்றிவிட்டிருக்கிறார்கள்.

இவ்வாறாக மீள முடியாத அசாதாரண சூழ்நிலையை ஏற்படுத்திவிட்டு, சர்வகட்சி மாநாடு என்ற நாடகத்தை அரங்கேற்றி இருக்கிறார்கள். ராஜபக்‌ஷர்கள் எந்தவொரு தருணத்திலும் பங்காளிக் கட்சிகளினதோ, எதிர்க்கட்சிகளினதோ கருத்துகளை கணக்கில் எடுத்ததில்லை. ஏன், அவர்கள் தங்களின் சொந்தக் கட்சியின் முக்கியஸ்தர்களின் கருத்துகளையே செவிமடுப்படுதில்லை.

அவ்வப்போது சர்வதேச நெருக்கடிகள் அல்லது கட்டாயத்தால், சர்வகட்சி மாநாடுகள், பேச்சுவார்த்தைகள் என்கிற பெயர்களில் ஏதாவது காட்சிகளை அரங்கேற்றுவார்கள். இம்முறையும் அவ்வாறான காட்சிகளை அரங்கேற்றும் நோக்கிலேயே, சர்வகட்சி மாநாட்டுக்கான அழைப்பை விடுத்தார்கள்.

ஆனால், அவர்கள் எதிர்பார்த்த வரவேற்பு எந்தத் தரப்பிடம் இருந்தும் கிடைக்கவில்லை. குறிப்பாக, ஆளும் கூட்டணியில் இன்னமும் இருக்கின்ற இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் கூட, சர்வகட்சி மாநாட்டைப் புறக்கணித்து இருக்கின்றது. தங்களது கோரிக்கைகள், ஆலோசனைகளை அரசாங்கம் கேட்கவில்லை என்கிற காரணத்தாலேயே, தாங்கள் சர்வகட்சி மாநாட்டைப் புறக்கணித்திருப்பதாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் அறிவித்திருக்கின்றது.

ராஜபக்‌ஷர்கள், தங்களின் ஆட்சியின் தோல்வியை, மற்றவர்களின் தலையில் ஏற்றும் நோக்கிலேயே, சர்வகட்சி மாநாட்டை நடத்துவதாக பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் அறிவித்து மாநாட்டைப் புறக்கணித்தன.

ராஜபக்‌ஷர்களின் தோல்வியின் அளவை, இன்னும் இன்னும் அதிகரிக்கும் வேலைகளை மாத்திரமே எதிர்க்கட்சிகள் செய்ய நினைக்கும். அப்படியான நிலையில், ராஜபக்‌ஷர்களின் சர்வகட்சி மாநாட்டில் பங்கெடுப்பது என்பது, ராஜபக்‌ஷர்களின் தோல்விக்கு ஒத்தடம் தடவுவது போல அமையும்.

எதிர்க்கட்சிகளாகத் தாங்கள் சும்மா இருந்தாலே போதும், மக்களே சுயமாக கிளர்ந்தெழத் தொடங்கிவிட்டார்கள்; இப்படியான நிலையில், ராஜபக்‌ஷர்களோடு கைகுலுக்குவது என்பது, மக்களின் கிளர்ச்சியைத் தணிப்பது போலானது என்று எதிர்க்கட்சிகள் சிந்திப்பது இயல்பானது.

ஆனால், ராஜபக்‌ஷர்களைத் தேசத்தின் காவலர்களாகவும் அபிவிருத்தி நாயகர்களாகவும், ஒளிவட்டங்களை வரைந்தவர்கள், ஆட்சியின் பங்காளியாக இருந்தவர்கள் எல்லாமும் தற்போது, 'செத்த நாயில் இருந்து கழரும் உண்ணிகள் போல' கழன்று ஓடத்தொடங்கிவிட்டார்கள். ராஜபக்‌ஷர்களின் சர்வகட்சி மாநாடு, நடந்து முடிந்திருக்கின்ற விதமே அதற்கு நல்ல சாட்சி.

யுத்த வெற்றி வாதத்தை மட்டும் நம்பி, எந்தவொரு தரப்பிடமும் ஆட்சியை மீண்டும் மீண்டும் கையளிக்கக்கூடாது என்பதை, தென் இலங்கை மக்கள் இன்றைக்குத்தான் உணர்கிறார்கள்.

ராஜபக்‌ஷர்களை, அவர்கள் கொண்டாடிக் கொண்டு வெற்றி பெற வைத்து, மீண்டும் ஆட்சிக்குக் கொண்டு வந்த போது, நாட்டில் தேனும் பாலும் ஓடப்போவதாக அவர்கள் நம்பினார்கள். ஆனால், இன்றைக்கு அதே மக்கள்தான், எரிபொருள்களுக்காக வரிசையில் நின்று, ராஜபக்‌ஷர்களை பல தலைமுறைகளுக்கும் சேர்த்துத் திட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

ராஜபக்‌ஷர்களின் வெற்றிக்காக ஊதுகுழலாக இயங்கிய ஊடகங்களும் பிரசாரகர்களும், மக்கள் மத்தியில் செல்ல முடியாத நிலை ஏற்பட்டிருக்கின்றது. ராஜபக்‌ஷர்களுக்காக இனவாதத்தை கடந்த காலங்களில் நாளொரு வடிவத்தில் பரப்பியவர்கள், தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் இடைநடுவில் ஓடுகிறார்கள்.

"தாய்நாடுதான் எல்லாமும், நாட்டை பிரிவினையில் இருந்து காப்பாற்றிய ராஜபக்‌ஷர்களே ஒரே தெரிவு" என்று பேசிய தென் இலங்கையின் மத்தியதர வர்க்கம், எப்படியாவது நாட்டைவிட்டு சென்றுவிட வேண்டும் என்று, கடவுச்சீட்டு அலுவலகத்திலும் தூதுவராலயங்களிலும் காத்து நிற்கின்றது.

சர்வதேச நாடுகளோ, இலங்கையின் இன்றைய நெருக்கடி நிலையைக் குறித்து செய்தி வெளியிடும் போது, பச்சாத்தாபங்களை வெளிப்படுத்துகின்றன.


ராஜபக்‌ஷர்கள் பற்றி, சர்வதேசம் இரண்டு கருத்துகளையே கொண்டிருக்கின்றது. ஒன்று, விடுதலைப் புலிகளை அழித்தவர்கள். இரண்டாவது, புலிகளை அழிப்பதற்காக மாபெரும் மனித உரிமை மீறல்களைப் புரிந்தவர்கள். இந்த இரண்டு கருத்துகளைத் தாண்டி இப்போது, 'ஊழலின் பெருச்சாளிகள்'; நாட்டை ஒட்டுமொத்தமாகத் திவாலாக்கியவர்கள் என்கிற அடையாளத்தைப் பெறுகிறார்கள்.

ராஜபக்‌ஷர்களின் ஊழல் தொடர்பில், தென் இலங்கை போன்று, சர்வதேசமும் ஆரம்பத்தில் அவ்வளவு கரிசனை கொள்ளவில்லை. ஆனால், நாடு இன்றைக்கு வந்து சேர்ந்திருக்கின்ற இடம் அதைப் பகிரங்கப்படுத்தி இருக்கின்றது.

புலிகளை அழிக்கும் யுத்தத்துக்கு உதவியது போல, வெளிநாடுகள் கடன்கள் வழங்கும் என்று ராஜபக்‌ஷர்கள் அதிகம் நம்பினார்கள். குறிப்பாக, சீனாவில் பெரும் நம்பிக்கை கொண்டிருந்தார்கள். ஆனால், அவர்களின் எண்ணம் நிறைவேறாத புள்ளியில், நாட்டை சீரழிவின் பக்கத்தில் முழுவதுமாக கொண்டுவந்து சேர்த்திருக்கிறார்கள்.

கடன்களில் மாத்திரம் ஆட்சியை நடத்தும் எந்த அரசாங்கமும் மக்களை நட்டாற்றில் விடும் வேலைகளை மாத்திரமே செய்யும். இலங்கையின் அனைத்து அரசாங்கங்களும் அதற்கு பொறுப்பாளிகளே. ஆனால், ராஜபக்‌ஷர்கள் அதில் முதன்மைப் பொறுப்பாளிகள்.

இனியாவது ஆட்சிக்கு வர நினைப்பவர்கள், உண்மையான பொருளாதார திட்டங்களோடு நாட்டை பொறுப்பேற்கத் துணிய வேண்டும். இல்லையென்றால், இன்னொரு ராஜபக்‌ஷர்களின் காலத்து இலங்கையை, சிந்தித்துப் பார்க்கவே முடியவில்லை. அது, சோமாலியா, எத்தியோப்பியாக்களைக் காட்டிலும் படுமோசமான நாடாக மாறும்.



## வாழ்வியல் தரிசனம்

உலகளாவிய ரீதியில் கொரோனா வைரஸ் கிருமிகளால் பேரழிவு வருமென எந்த மனிதரும் எண்ணியிருக்கவில்லை. உலக வரலாறுகளில், இப்படி கிருமிகளால் பெரும் அழிவு வரும் என, முன்கூட்டியே எவரும் நினைக்காது விட்டாலும் பேரழிவுகள் காலத்துக்குக் காலம் உலகில் சம்பவித்திருக்கின்றன. இயற்கையின் மாற்றங்கள்; சுனாமி பேரழிவை மறக்கமுடியுமா?

நிலம், நீர், காற்று, நெருப்பு மூலமே அழிவுகள் வந்தன. நில நடுக்கம், அதிர்வு நிலத்தில் நடப்பவை. பெருவெள்ளம், புதிய தீவுகள் உருவாகுதல், கண்டங்கள் பிரிதல் எல்லாமும் கடல்கோளால் நடப்பவை; இவை நீரால் வரும் கொடிய நிலைகளாகும்.

ஊழிக்காற்றால் இடிபாடுகள், தாவரங்கள், மரங்கள் பாரிய சேதமடைகின்றன. மேலும், இடிமின்னலால் ஏற்படும் அழிவுகள் எல்லாம் அடிக்கடி நிகழ்கின்றன.

தீயை எடுத்துக்கொண்டால், எரிமலை வெடித்து, மலைகள் உடைந்து வரும் சேதம் பயங்கரமானது. பஞ்சபூதங்களால் எதுவும் நடக்கும்.

ஆனாலும், கண்களுக்குத் தெரியாத பல கிருமிகள் இருந்தாலும் கொரோனா வைரஸ் முழு உலகத்தையே அதிரவைத்துள்ளது. பாரிய உலகை உடைக்க முடியாது. இறையருளால் நிலைமைகள் மாறும்.

-பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### துர்நாற்றம் வீசும் பிரதேசமாக காரைதீவு வெட்டுவாய்க்கால்

காரைதீவு பிரதேச சபைக்கு உட்பட்ட வெட்டுவாய்க்கால் வீதி, கடற்கரை வீதியில் சந்திக்கும் இடத்திலுள்ள பாலத்துக்கு அருகாமையில், குப்பைகள் தினசரி கொட்டப்படுவதால், பிரதேச மக்களும் இப்பாதையால் பயணிப்போரும் பலவிதமான இன்னல்களுக்கு உள்ளாகி வருகின்றனர்.

இவ்விடயமாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பலமுறை அறிவித்தும் இந்தநிலை தொடர்ச்சியாகவே இடம்பெற்று வருவதாகவும், விலங்குகளின் கழிவுகளும் இவ்விடத்தில் சேர்வதால், இப்பிரதேசத்தில் துர்நாற்றம் வீசுவதாகவும் பிரதேசவாசிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறு மிகமோசமாக துர்நாற்றம் வீசுவதால் சுற்றுச்சூழல், ஆரோக்கியமும் சுகாதாரமும் அற்றுக் காணப்படுவதாகவும் அத்துடன் விலங்குக் கழிவுகளை பறவைகளும் விலங்குகளும் இழுத்துவந்து, வீதியிலும் குடிமனைகளிலும் போட்டுவிடுவதாகவும் மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இந்த இடத்துக்கு அருகாமையில், குப்பைகளை சேதனப் பசளையாக்கும் நிலையம் அமைந்து காணப்படுவதும் குறிப்பிடத்தக்கது. எனவே, இவ்வாறு பாதுகாப்பற்ற முறையில் குப்பைகள் கொட்டப்படுவதைத் தடுப்பதற்கு பொறுப்புவாய்ந்த நிறுவனம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை முன்வைக்கப்படுகின்றது.

அஸ்ஹர் இப்றாஹிம்





# “பால் பவுடர் கூட வாங்க முடியலை”

“இலங்கையில் பால் பவுடர் கூட வாங்க முடியலை” – குழந்தைகளைக் காக்க தமிழகத்துக்கு மீண்டும் அகதிகளாக வந்த 2 குடும்பத்தினரின் குமுறல்.

இராமேஸ்வரம்:

வரலாறு காணாத பொருளாதார நெருக்கடியை இலங்கை சந்தித்து வரும் நிலையில், படகு மூலம் மீண்டும் அகதிகளாக இரண்டு குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் இராமேஸ்வரம் வந்தனர்.

இலங்கையின் பொருளாதாரத்துக்குப் பெரும் பங்கு வகிப்பது, அந்நாட்டுக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகள், மலையகங்களில் உள்ள தேயிலை தோட்டங்கள், ஆடை உற்பத்தி என்பவை ஆகும்.

உலகளாவிய ரீதியில் கொரோனா வைரஸ் பரவல் காரணமாக, 2020 மார்ச் மாதம் முதல் இலங்கையில் சுற்றுலா, தேயிலை உற்பத்தி, ஆடை தயாரிப்பு போன்ற முக்கிய தொழிற்றுறைகள் மூன்றும் முற்றிலுமாகப் பாதிப்படைந்தன.

இதனால் இலங்கைக்கு வந்து கொண்டிருந்த அந்நியச் செலாவணி வரத்து கடுமையாகப் பாதிக்கப்பட்டதுடன் படிப்படியாகப் பொருளாதாரப் பின்னடைவையும் சந்திக்கத் தொடங்கியது.

இலங்கையில் தொடர்ந்து அத்தியாவசிய பொருட்களின் விலை விண்ணைத் தொட்டு வருவதால், மக்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். இலங்கை ரூபாய் மதிப்பில் ஒரு முட்டை ரூ.36, தேநீர் ரூ.100, அரிசி ரூ.200, வெங்காயம் ரூ. 250, கோழி இறைச்சி ரூ.1,000க்கும் விற்கப்படுகிறது.

இலங்கையின் பொருளாதார நெருக்கடியின் எதிரொலி காரணமாக, தனுஷ்கோடி அருகே நான்காம் மணல் தீடை பகுதியில் அகதிகளாக குழந்தைகளுடன் இரண்டு குடும்பத்தினர் திங்கட்கிழமை (21) அதிகாலை படகில் வந்து இறங்கினர்.

நான்காம் மணல் தீடை பகுதியில் அகதிகள் சிலர் வந்திறங்கி உள்ளதாக, அந்தப் பகுதியில் மீன்பிடித்துக் கொண்டிருந்த மீனவர்கள் அளித்த தகவலின் அடிப்படையில், இந்திய கடலோர காவல்படையினர் ‘ஹோவர் கிராஃப்ட்’ படகின் மூலம் தீடையில் இருந்த ஆறு பேரையும் மீட்டு, மண்டபத்தில் உள்ள இந்திய கடலோர காவல்படையினரின் முகாமுக்கு கொண்டு வந்து, மெரைன் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

மெரைன் பொலிஸின் விசாரணையில், யாழ்ப்பாணத்தை சேர்ந்த கஜேந்திரன் (24) ஈரோடு மாவட்ட அகதிகள் முகாமிலிருந்து 2016 ஆம் ஆண்டில் இலங்கையில் உள்ள யாழ்ப்பாணத்துக்கு திரும்பியவர்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மேரி கிளாரி (24)யை திருமணம் செய்து கொண்டார். இந்தத் தம்பதிக்கு நிசாந்த் என்ற நான்கு மாத குழந்தை உள்ளது.

மேலும் 2016 இல் குடியாத்தம் அகதிகள் முகாமிலிருந்து இலங்கையில் உள்ள மன்னார் மாவட்டம் சிலாபத்துறைக்குத் திரும்பியவர் தியோரி (28). கணவர் அவரை கைவிட்ட நிலையில், தனது 9 வயது குழந்தை எஸ்தர், 4 வயது குழந்தை மோசஸ் ஆகியோருடன் வந்துள்ளார்.

“இலங்கையில் ஏற்பட்டுள்ள கடுமையான பொருளாதார வீழ்ச்சியின் காரணமாக குழந்தையின் பால் பவுடர் உட்பட அரிசி, பருப்பு, கோதுமை, பாண், எரிவாயு, மண்ணெய் உள்ளிட்ட பொருட்களுக்கு கடும் தட்டுப்பாடு நிலவுவதாலும், வேலை வாய்ப்பும் குறைந்துள்ளதால் குழந்தைகள் உயிரையாவது காப்பாற்ற வேண்டும் என்ற எண்ணத்தில் அகதிகளாக வந்துவிட்டோம்” என்கின்றார்கள் இவர்கள்.

தலைமன்னார், பேசாலையிலிருந்து கையில் இருந்த பணத்தைக் கொடுத்து, தமிழகத்துக்கு வந்ததாக விசாரணை அதிகாரிகளிடம் தெரிவித்துள்ளனர்.

மேலும், மண்டபம் மெரைன் பொலிஸார், கடவுச்சீட்டு சட்டத்தின் கீழ் வழக்குப் பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.

(நன்றி: தி ஹிந்து)

**நான்காம் மணல் தீடை பகுதியில் அகதிகள் சிலர் வந்திறங்கி உள்ளதாக, அந்தப் பகுதியில் மீன்பிடித்துக் கொண்டிருந்த மீனவர்கள் தகவல் அளித்தனர்**

**“தலைமன்னார், பேசாலையிலிருந்து கையில் இருந்த பணத்தைக் கொடுத்து, தமிழகத்துக்கு வந்தோம்”**

**“பொருட்களுக்கு கடும் தட்டுப்பாடு நிலவுவதாலும், வேலை வாய்ப்பும் குறைந்துள்ளதால் குழந்தைகள் உயிரையாவது காப்பாற்ற வேண்டும் என்ற எண்ணத்தில் அகதிகளாக வந்துவிட்டோம்”**



தனுஷ்கோடி அருகே மணல் தீடையில் கஜேந்திரன் தனது மனைவி மேரி கிளாரி மற்றும் குழந்தை நிசாந்த்



தனுஷ்கோடி அருகே மணல் தீடையில் தியோரி மற்றும் குழந்தைகள் எஸ்தர், மோசஸ்

புதுடெல்லி

காற்று மாசடைவு:

## முதல் இடத்தில் புதுடெல்லி

காற்று மாசடைவால் பாதிக்கப்பட்டுள்ள முதல் 100 நகரங்களின் பட்டியலில், இந்தியாவின் 63 நகரங்கள் இடம்பெற்றுள்ளமை இந்தியர்களிடையே அதிர்ச்சியையும் சோகத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

உலக அளவில் 2021ஆம் ஆண்டின் காற்று மாசு குறித்து சுவிட்சர்லாந்தைச் சேர்ந்த IQAir என்ற நிறுவனம் அண்மையில் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

குறித்த அறிக்கையின்படி, உலகின் அதிக மாசடைந்த நகரமாக ராஜஸ்தானின் பிவாடி தெரிவு செய்யப்பட்டுள்ளதோடு நான்காவது மாசடைந்த நகரத்தின் பட்டியலில் புதுடெல்லி இடம்பெற்றுள்ளது.

அதேவேளையில் அதிக மாசடைந்த தலைநகரங்களில் புதுடெல்லி முதலிடத்தில் உள்ளது. மேலும், அதிகளவில் மாசடைந்த முதல் 15 நகரங்களில் இந்தியாவில் 10 நகரங்கள் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.



வாகனப் புகை, அனல் மின் நிலையங்கள், தொழிற்றுறை கழிவுகள், கட்டுமானங்கள் காரணமாகவே காற்று மாசடைதல் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்கு வங்காளம்

## 8 பேர் உயிருடன் எரித்துக் கொலை

எட்டுப் பேர் உயிருடன் எரித்துக் கொலை செய்யப்பட்ட சம்பவம் மேற்கு வங்காள மாநிலத்தின் பீர்பூம் மாவட்டத்தில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

பீர்பூம் மாவட்டம், ராம்பூர்ஹத்தில் உள்ள பர்ஷல் கிராமத்தின், துணை தலைவராக இருந்தவர் பாது ஷேக்.

திரிணாமுல் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த இவர் மீது நேற்று முன்தினம் இரவு (22) மோட்டார் சைக்கிளில் வந்த நால்வர் வெடிகுண்டை வீசிவிட்டு தப்பிச்சென்றுள்ளனர்.

இதில் படுகாயம் அடைந்த அவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

இதனால் அக் கிராமத்தில் பதற்றமான சூழ்நிலை ஏற்பட்டது. இதன்போது வன்முறையில் ஈடுபட்ட கும்பலொன்று அப்பகுதியிலுள்ள பல வீடுகளுக்குத் தீ வைத்தது.

இதில் 8 பேர் தீயில் கருகி உயிரிழந்துள்ளனர்.

இச்சம்பவமானது அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.



ஹைதராபாத்

## இனி ‘ஏ.டி.எம்’ இல் தங்கம்

ஏ.டி.எம் மூலமாக தங்கம் வாங்கும் வசதி, இந்தியாவில் விரைவில் அறிமுகம் செய்யப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் ஏ.டி.எம் மையத்தில் பணம் எடுப்பது போன்று தங்கத்தையும் கொள்வனவு செய்து கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில் ஏ.டி.எம் மையமானது, முதன் முதலாக ஹைதராபாத்தில் ஆரம்பிக்கப்பட உள்ளதாகவும், இதனை கோல்ட் சிக்கா லிமிடெட் என்ற நிறுவனம் அமைக்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், இந்நிறுவனம் தரப்பில் இருந்து தங்கத்தைக் கொள்வனவு செய்ய முன்கொடுப்பனவு, பிற்கொடுப்பனவு அட்டைகள் வழங்கப்பட உள்ளதாகவும், இதனை டேட்டாவேர் எல்.எல்.பி என்ற நிறுவனத்துடன் இணைந்து மேற்கொள்ளவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



இது குறித்து அந்நிறுவனம் கருத்துத் தெரிவிக்கையில், “இந்தியாவில் தங்கத்திற்கான ஏ.டி.எம் அறிமுகம் செய்யப்படுவது இதுவே முதல் முறை. எனவே இன்னும் ஓர் ஆண்டுக்குள் இந்தியா முழுவதும் 3,000 ஏ.டி.எம் மையங்களை நிறுவ முடிவு செய்துள்ளோம்” என்றார்.




சென்னை

## இல்லத்தரசிகள் வேதனை

கடந்த நான்கு மாதங்களுக்குப் பிறகு, சமையல் எரிவாயு சிலிண்டரின் விலை 50 ரூபாயால் உயர்த்தப்பட்டுள்ளது.

இதேபோல், பெட்ரோல், டீசல் விலையும் அதிகரித்துள்ளது. சமையல் எரிவாயு சிலிண்டர் விலை உயர்வால் இல்லத்தரசிகள் வேதனை அடைந்துள்ளனர்.

சர்வதேச சந்தையில் நிலவும் கச்சா எண்ணெய் விலை, டொலருக்கு எதிரான இந்திய ரூபாயின் மதிப்பு ஆகியவற்றின் அடிப்படையில் 15 நாள்களுக்கு ஒருமுறை பெட்ரோல், டீசல், சமையல் எரிவாயு சிலிண்டர் விலையை எண்ணெய் நிறுவனங்கள் நிர்ணயித்து வருகின்றன.



சீனாவில் 23,000 இந்திய மாணவர்களின்

## கல்வி கேள்விக் குறி

சீனாவில் அண்மைக் காலமாகக் கொரோனா வைரஸ் தொற்றுப் பரவலானது தீவிரமடைந்து வருகிறது. இதன் காரணமாக அந்நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் ஊரடங்கு அமல்படுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில் இத்தொற்றுப் பரவல் காரணமாக, சீனாவில் மருத்துவம் பயின்று வரும் 23,000 இந்திய மாணவர்களின் கல்வி, கேள்விக் குறியாகி உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக, இரண்டு ஆண்டுகளுக்கு முன்னரும் இதேபோன்று கொரோனா வைரஸ் பரவல் காரணமாக, அவர்களது நேரடிக் கல்வி நடவடிக்கை பாதிக்கப்பட்டிருந்த நிலையில், தற்போது மீண்டும் நேரடி கல்வியைத் தொடர முடியாத சூழல் ஏற்பட்டுள்ளதாக அம்மாணவர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

சென்னை

## சிறைகளில் விளையாட்டு

சிறைக் கைதிகளின் விடுதலைக்குப் பின்னர், அவர்கள் சமூகத்தில் சகஜமாக வாழ உறுதுணை புரியும்வகையில், ‘பரிவர்த்தன் - சிறையிலிருந்து பெருமை மிக்க வாழ்வுக்கு’ என்ற திட்டத்தை இந்தியன் ஒயில் நிறுவனம் செயற்படுத்தி வருகிறது.

இத்திட்டத்தின் முதற்கட்டம் 2021 ஆம் ஆண்டு சுதந்திர தினத்தின்போதும், 2 ஆம் கட்டம் ஒக்டோபர் 2 ஆம் திகதியும் ஆரம்பமானது. இதன்மூலம் 1,100க்கும் மேற்பட்ட சிறைவாசிகளுக்கு விளையாட்டுப் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.



ஜின்னா ஒரு முறை பிரித்தார்;

## பா.ஜ.க தினமும் பிரிக்கின்றது



பாகிஸ்தானை உருவாக்க முஹமது அலி ஜின்னா இந்தியாவை ஒருமுறை பிரித்தார்; ஆனால் பாரதிய ஜனதா கட்சி (பா.ஜ.க) தலைவர்கள் தங்கள் பேச்சு மூலம் இந்து, முஸ்லிம்களிடம் மோதலை ஏற்படுத்தி, தினசரி நாட்டைப் பிரித்து வருகிறார்கள் என்று சிவசேனை கட்சி எம்.பி. சஞ்சய் ரௌத் தெரிவித்தார்.

நாகபுரியில் நடைபெற்ற சிவசேனை கட்சி கூட்டத்தில் பங்கேற்றுவிட்டு செய்தியாளர்களிடம் சஞ்சய் ரௌத் கூறுகையில்; “இந்தியாவில் 22 கோடிக்கும் அதிகமான முஸ்லிம்கள் வாழ்கின்றனர். அவர்களில் பலர் பா.ஜ.கவுக்கும், சிவசேனைக்கும் வாக்களித்துள்ளனர்.

பாகிஸ்தானை உருவாக்க முஹமது அலி ஜின்னா இந்தியாவை ஒருமுறை பிரித்தார். ஆனால், பா.ஜ.க தலைவர்கள் தங்களின் பேச்சுகளின் மூலம் இந்து -முஸ்லிம்களிடையே மோதலை ஏற்படுத்தி நாட்டை தினசரி பிரித்து வருகிறார்கள் என சஞ்சய் ரௌத் தெரிவித்துள்ளார்.



உக்ரேன்

### மோதல் போக்கான ரஷ்யப் பேச்சுகள்

# முன்னகருகின்றன

ரஷ்யாவுக்கும், உக்ரேனுக்கும் இடையிலான பேச்சுகள் மோதல் போக்கானவையாகக் காணப்படுகின்றபோதும் முன்னகருவதாக உக்ரேனிய ஜனாதிபதி வொலடீமர் ஸிலென்ஸ்கி நேற்று (22) தெரிவித்துள்ளார்.

மோசமடைந்து வரும் மனிதாபிமான நெருக்கடிகளுக்கு மத்தியில் ரஷ்யாவுக்கெதிராக மேற்குலகமானது மேலதிக தடைகளை அறிவிக்கத் திட்டமிடுகையிலேயே இக்கருத்து வந்துள்ளது.

இந்நிலையில், துறைமுகநகரான மரிபோலில் குண்டுத் தாக்குதல்களும் கடுமையாக இடம்பெற்று வருகின்றன.

ரஷ்யா

### அணுவாயுத இருப்புக்கு அச்சுறுத்தல் என்றாலே

# அணுவாயுதங்களை ரஷ்யா பயன்படுத்தும்



ரஷ்யாவின் அணுவாயுத இருப்புக்கு அச்சுறுத்தலென்றாலே அணுவாயுதங்களை ரஷ்யா பயன்படுத்துமென அதன் பாதுகாப்புக் கொள்கை வெளிப்படுத்துவதாக, சி.என்.என்னுடனான நேர்காணலொன்றில் ரஷ்யாவின் பேச்சாளர் டிமித்ரி பெஸ்கோவ் நேற்று முன்தினம் (22) தெரிவித்துள்ளார்.

ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் அணுவாயுதங்களைப் பயன்படுத்த மாட்டார் என உறுதியாயிருக்கிறீர்களான என பெஸ்கோவை வினவியபோதே குறித்த கருத்தை பெஸ்கோவ் வெளிப்படுத்தியுள்ளார்.




ஐக்கிய அமெரிக்காவின் நியூ ஓர்லியன்ஸை நேற்று முன்தினம் கிழித்துச் சென்ற சுழிக்காற்றால் ஒருவர் கொல்லப்பட்டதுடன், வீடுகள் அழிவடைந்ததுடன், மின் இணைப்புகள் வீழ்ந்ததாக ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

கனடா

### 2025ஆம் ஆண்டு வரை பதவியில் தொடருவதற்கான

# ஒப்பந்தத்தை எட்டிய பிரதமர் ட்ருடோ

தங்களது சிறுபான்மையின அரசாங்கத்தை 2025ஆம் ஆண்டு வரையில் தொடருவதற்கான ஒப்பந்தமொன்றை இடதுசாரிக் கொள்கைகளை நோக்கிப் பயணிக்கும் எதிர்க்கட்சியான புதிய ஜனநாயகக் கட்சியுடன் கனடாவின் ஆளும் லிபரல்கள் எட்டியுள்ளதாக அந்நாட்டுப் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ அறிவித்துள்ளார்.

இதேவேளை, குறைந்த வருமானமுடைய குடும்பங்களுக்கு பற் பாதுகாப்புத் திட்டமொன்று உள்ளடங்கலான பல்வேறுபட்ட பிரச்சினைகளுக்கான தீர்வுகளை முன்னகர்த்துவதாக



பிரதமர் ட்ரூடோ உறுதியளித்துள்ளார்.

குறித்த ஒப்பந்தத்தின்படி 338 ஆசனங்களையுடைய பாராளுமன்றத்தில் பெரும்பான்மைக்கு 170 ஆசனங்கள் தேவைப்படுகின்ற நிலையில், லிபரல் கட்சி அரசாங்கத்துக்கு 184 ஆசனங்கள் கிடைத்துள்ளன.

சீனா

### வீழ்ந்த ஜெட்டில் இருந்தவர்களை தேடுவது

# மழையால் இடைநிறுத்தம்

தென் சீனாவில் கடும் மழை காரணமாக உயிரிழந்தவர்களை தேடுவது, விமானத்தின் கறுப்புப் பெட்டியைத் தேடுவது நேற்று (23) இடைநிறுத்தப்பட்டுள்ளது.

மலைப்பாங்கான பகுதியில் இரண்டு நாள்களுக்கு முன்னர் 132 பேருடன் சீன பயணிகள் விமானமானது ஏன் வீழ்ந்தது என கறுப்புப் பெட்டிகள் மூலமே தெரிய வரும் என்பது குறிப்பிடத்தக்கது.

விபத்தால் ஏற்பட்ட அழுத்தத்தால் மென்மையாகவுள்ள மண்ணை, மழை நீர் நிரப்புவதாக சீன அரச தொலைக்காட்சி செய்தி வெளியிட்டுள்ளதுடன், நிலச்சரிவுகள் ஏற்படும் அபாயமும் குறித்த குவாங்ஸி பிராந்தியத்தில் காணப்படுவதாக உள்ளூர் வானிலை முகவரகமும் தெரிவித்துள்ளது.

இந்த வாரம் முழுவதும் இவ்வானிலை தொடரும் என எதிர்வுகூறப்பட்டுள்ளது.

தென்மேற்கு நகரமான குன்மிங்கிலிருந்து கரையோரத்திலுள்ள குவான்ஸுவுக்குச் செல்லும்போதே, சடுதியாக விமானத்தைத் தரையிறங்குவதற்கு உயரத்தைக் குறைக்க ஆரம்பிக்கும் நேரத்தில் வீழ்ந்திருந்தது. என்ன காரணத்தால் வீழ்ந்தது என இதுவரையில் கண்டுபிடிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.



பாகிஸ்தான்

### வான்படை விமானம் வீழ்ந்தது

# விமானிகள் இருவர் பலி

பாகிஸ்தானின் வடமேற்கில் பயிற்சிப் பறப்பொன்றில் இருக்கும்போது அந்நாட்டு வான்படையின் பயிற்சி விமானமொன்று நேற்று முன்தினம் வீழ்ந்ததில், அதிலிருந்த இரண்டு விமானிகள் கொல்லப்பட்டதாக வான் படையின் பேச்சாளரொருவர் தெரிவித்துள்ளார்.

வழமையான பறப்பின்போது பெஷாவருக்கு அருகில் பயிற்சி விமானம் வீழ்ந்ததாக வான் படையால் வெளியிடப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், சம்பவத்துக்கான காரணத்தைக் கண்டறிவதற்காக விசாரணையொன்றுக்கு உத்தரவிடப்பட்டுள்ளதாக குறித்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.



# ஓய்வு பெற்ற முதல்நிலை வீராங்கனை பார்ட்டி

உலகின் முதல்நிலை டென்னிஸ் வீராங்கனையான அஷ் பார்ட்டி ஓய்வு பெறுவதாக நேற்று அறிவித்துள்ளார்.

25 வயதான பார்ட்டி மூன்று கிராண்ட் ஸ்லாம் பட்டங்களை வென்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

முன்னதாக பதின்ம வயதினராக இருக்கும்போது கடந்த 2014ஆம் ஆண்டு இறுதியிலும் டென்னிஸிலிருந்து அவுஸ்திரேலியாவின் பார்ட்டி ஓய்வு பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

பின்னர் 2016ஆம் ஆண்டு மீண்டும் டென்னிஸுக்குத் திரும்பியிருந்தார்.



# சம்பியனான எஸ்.டி.ஆர் கழகம்

நூருல் ஹுதா உமர்

அம்பாறை மாவட்ட 25 விளையாட்டு கழகங்கள் கலந்து கொண்ட மென்பந்து கிரிக்கெட் தொடரில் எஸ்.டி.ஆர் கழகம் சம்பியனானது.

சம்மாந்துறை புதிய பொது மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற இத்தொடரில், தனது குழுவில் மோதிய சகல அணிகளையும் வீழ்த்தி எஸ்.டி.ஆர் இறுதிப் போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டது. மறுமுனையில் தனது குழுவில் போட்டியிட்ட சகல அணியினரையும் வீழ்த்தி வெற்றி பெற்ற சம்மாந்துறை நியூசன் அணி இறுதி போட்டியில் எஸ்.டி.ஆருடன் மோதியது.

இறுதிப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய எஸ்.டி.ஆர், நிர்ணயிக்கப்பட்ட ஓவர்களில் 63 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. இதற்கமைய பதிலுக்கு 64 ஓட்டங்களை வெற்றி இலக்காக கொண்டு துடுப்பெடுத்தாட களம் இறங்கிய நியூசன் நிர்ணயிக்கப்பட்ட ஓவர்களில் 52 ஓட்டங்கை மாத்திரம் பெற்றுக் கொண்டு 11 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.



இறுதிப் போட்டியின் நாயகனாக எஸ்.டி.ஆரின் சாஜித், தொடரின் நாயகனாக நியூசன் அணியின் வீரர் சாகிர் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

இவ்விறுதிப் போட்டியில், இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர் அமீர் அஃப்னான் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு கிண்ணங்களை வழங்கி வைத்தார்.

### துடுப்பாட்ட வீரர்களின் தரவரிசையில்

# மூன்றாமிடத்துக்கு முன்னேறினார் டி கொக்

சர்வதேச கிரிக்கெட் சபையின் ஒருநாள் சர்வதேசப் போட்டிகளுக்கான துடுப்பாட்டவீரர்களுக்கான தரவரிசையில் மூன்றாமிடத்துக்கு தென்னாபிரிக்காவின் குயின்டன் டி கொக் முன்னேறியுள்ளார்.

பங்களாதேஷுக்கெதிரான இரண்டாவது போட்டியில் 62 ஓட்டங்களைப் பெற்றதைத் தொடர்ந்தே நான்காமிடத்திலிருந்து ஓரிடம் முன்னேறி மூன்றாமிடத்தை அடைந்துள்ளார்.

இதேவேளை, பங்களாதேஷுக்கெதிரான முதலிரண்டு போட்டிகளிலும் 94 ஓட்டங்களைப் பெற்ற தென்னாபிரிக்காவின் றஸி வான் டர் டுஸன், எட்டாமிடத்திலிருந்து இரண்டு இடங்கள் முன்னேறி ஆறாமிடத்தை அடைந்துள்ளார்.

முதல் 10 துடுப்பாட்டவீரர்களின் தரவரிசை பின்வருமாறு,

பாபர் அஸாம், 2. விராட் கோலி, 3. குயின்டன் டி கொக், 4. றோஹித் ஷர்மா, 5. ஆரோன் பின்ஞ், 6. றஸி வான் டர் டுஸன், 7. ஜொனி பெயார்ஸ்டோ, 8. டேவிட் வோணர், 9. பக்கர் ஸமன், 10. ஜோ றூட்.

இதேவேளை, இவ்விரண்டு போட்டிகளிலும் ஆறு விக்கெட்டுகளை கைப்பற்றிய



தென்னாபிரிக்காவின் ககிஸோ றபாடா, 13ஆம் இடத்திலிருந்து ஐந்து இடங்கள் முன்னேறி எட்டாமிடத்தை அடைந்துள்ளார்.

முதல் 10 பந்துவீச்சாளர்களின் தரவரிசை பின்வருமாறு,

ட்ரெண்ட் போல்ட், 2. ஜொஷ் ஹேசில்வூட், 3. கிறிஸ் வோக்ஸ், 4. மற் ஹென்றி, 5. முஜீப் உர் ரஹ்மான், 6. ஜஸ்பிரிட் பும்ராஹ், 7. மெஹிடி ஹஸன் மிராஸ், 8. ககிஸோ றபாடா, 9. மிற்செல் ஸ்டார்க், 10. ரஷீட் கான்.

முதல் ஐந்து சகலதுறைவீரர்களின் தரவரிசை பின்வருமாறு,

ஷகிப் அல் ஹஸன், 2. மொஹமட் நபி, 3. கிறிஸ் வோக்ஸ், 4. ரஷீட் கான், 5. மிற்செல் சான்ட்னெர்.

இந்நிலையில், டெஸ்ட் போட்டிகளுக்கான துடுப்பாட்டவீரர்களின் தரவரிசையில் ஐந்தாமிடத்துக்கு பாகிஸ்தானின் அணித்தலைவர் பாபர் அஸாம் முன்னேறியுள்ளார்.

அவுஸ்திரேலியாவுக்கெதிரான இரண்டாவது டெஸ்டில் 232 ஓட்டங்களைப் பெற்றதைத் தொடர்ந்தே, எட்டாமிடத்திலிருந்து மூன்று இடங்கள் முன்னேறி ஐந்தாமிடத்தை அஸாம் அடைந்துள்ளார்.

முதல் 10 துடுப்பாட்டவீரர்களின் தரவரிசை பின்வருமாறு,

மர்னுஸ் லபுஷைன், 2. ஜோ றூட், 3. ஸ்டீவ் ஸ்மித், 4. கேன் வில்லியம்ஸன், 5. பாபர் அஸாம், 6. திமுத் கருணாரத்ன, 7. றோஹித் ஷர்மா, 8. ட்ரெவிஸ் ஹெட், 9. விராட் கோலி, 10. றிஷப் பண்ட்.

முதல் 10 பந்துவீச்சாளர்களின் தரவரிசை பின்வருமாறு,

பற் கமின்ஸ், 2. இரவிச்சந்திரன் அஷ்வின், 3. ககிஸோ றபாடா, 4. ஜஸ்பிரிட் பும்ராஹ், 5. கைல் ஜேமிஸன், 6. ஷகீன் ஷா அஃப்ரிடி, 7. டிம் செளதி, 8. நீல் வக்னர், 9. ஜேம்ஸ் அன்டர்சன், 10. ஜொஷ் ஹேசில்வூட்.

முதல் ஐந்து சகலதுறைவீரர்களின் தரவரிசை பின்வருமாறு,

இரவீந்திர ஜடேஜா, 2. ஜேஸன் ஹோல்டர், 3. இரவிச்சந்திரன் அஷ்வின், 4. ஷகிப் அல் ஹஸன், 5. பென் ஸ்டோக்ஸ்

### வர்த்தக நிறுவனங்ளுக்கிடையிலான பூப்பந்தாட்ட இரட்டையர் போட்டியில்

# சம்பியனான செலான் வங்கி

2022 வர்த்தக நிறுவனங்களுக்கிடையிலான பூப்பந்தாட்ட இரட்டையர் அணி சம்பியன்சிப் 2022 போட்டிகளில் கோப்பைப் பிரிவில், செலான் வங்கி சம்பியன்களாக தெரிவு செய்யப்பட்டிருந்தது.

டயலொக் அணிக்கு எதிராக செலான் அணி போட்டியிட்டு 2 - 3 எனும் புள்ளிகள் அடிப்படையிலும், சம்பத் வங்கி அணிக்கு எதிரான போட்டியில் 3 - 1 எனும் அடிப்படையிலும் வெற்றியீட்டி இறுதிப் போட்டிக்கு தெரிவாகியிருந்தது. இறுதிப் போட்டியில் டயலொக் அணியுடன் போட்டியிட்டு 3 - 1 எனும் புள்ளிகள் அடிப்படையில் இலகுவான வெற்றியைப் பதிவு செய்திருந்தது.

செலான் வங்கி அணிக்கு



மஞ்சுள பெரேரா தலைமைத்து வமளித்திருந்ததுடன், அணியில் ரஷங்க பெர்னான்டோ, திமீர பென்தொட்டகே, பமீஷா திஷாந்தி, தமிந்த டி சில்வா, மதுசிகா தில்ருக்சி, லசிந்து நிம்சர, மஹிந்த ஜயவீர, ரவிப்பிரிய ரத்னதிலக மற்றும் ரேணு சந்திரிகா டி சில்வா ஆகியோர் அடங்கியிருந்தனர்.

# உயர் ஊடகவியல் விருது

## வாழ்நாள் சாதனையாளர்கள்



வாழ்நாள் சாதனையாளர்களாக உபாலி பொன்சேகா, டீ.பி.விக்கிரமசிங்க, புஷ்பா ரொவேல், சமன் சந்திர ரத்ன விக்கிரமசிங்க ஆகியோருக்கு தங்கப் பதக்கம் அணிவிக்கப்பட்டது. அவர்களை, ஏசியன் ஊடக வெளியீடுகளின் முகாமைத்துவ பணிப்பாளர் டொக்டர் பொ. கேசவராஜா, பொன்னாடை போர்த்தி கௌரவித்தார்.

**இலங்கை பத்திரிகை ஸ்தாபனத்தின் 2019-2020 ஆம் ஆண்டுகளுக்கான உயர் ஊடகவியல் விருது வழங்கும் நிகழ்வு, கொழும்பு ஹில்டன் ஹோட்டலில், மார்ச் 22 செவ்வாய்க்கிழமை மிகவும் எளிமையான முறையில் நடைபெற்றது. (படங்கள்: பிரதீப் தில்ருஷ்ண)**



## தமிழ் மிரருக்கு 3 விருதுகள்



தமிழ்மிரர் பத்திரிகைக்கு மூன்று விருதுகள் கிடைக்கப்பெற்றன. (இடமிருந்து வலமாக) கேலிச்சித்திரக் கலைஞர் நாமல் அமரசிங்க, (சிறந்த கேலிச்சித்திரம் – தமிழ்), தமிழ்மிரர் பக்க வடிவமைப்பு குழுவின் முகாமையாளர் தாரக முத்துக்குமார (சிறந்த பக்கவடிவமைப்பு – தமிழ்) வணிக ஆசிரியர் எஸ். சேகர் (சிறந்த வணிகக் கட்டுரையாளர் – தமிழ்) ஆகியோர் விருதுகளைப் பெற்றுக்கொண்டனர்.







எச். ஹஸ்னா – மருத்துவம் (2019, 2020), சுற்றுச்சூழல் (2019) விருதுகள் (3 விருதுகள்)
க. பிரசன்னா – தகவல் அறியும் உரிமைச்சட்டத்திற்கான விருதுகள் (2019, 2020) (2 விருதுகள்)
யோ. தர்மராஜ் – 2019 ஆண்டின் சிறந்த இளம் ஊடகவியலாளருக்கான விருது
துஷ்யந்தி சுரேஷ் – மருத்துவம் (2020, 2020 சிறப்பு விருதும் சான்றிதழும்)





















01. ஐ. ரொபர்ட் அன்டனி (உபாலி சிறிவர்தன விருது – 2019, ஆண்டின் சிறந்த ஊடகவியலாளர் விருது –2020)
02. ஆர். ராம்குமார் (உபாலி சிறிவர்தன விருது –2020)
03. சிவலிங்கம் சிவகுமாரன் (பி.ஏ. சிறிவர்தன விருது – 2019)
04. எஸ்.ஜே. பிரசாத் (விளையாட்டுத்துறை 2019, 2020 – 2 விருதுகள்)
05. ஜே.ஜி. ஸ்டீபன் (சுப்ரமணியம் செட்டியார் விருது)
06. ரிப்தி அலி (கைலாசபதி விருது)
07. கலைச்செல்வி பாலகுமார் (விடிவெள்ளி) (சிறந்த பக்க வடிவமைப்பு – சான்றிதழ்)































விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டால் வியாழக்கிழமை, 24 மார்ச் 2022, இல. 08, ஹுணுபிட்டி குறுக்கு வீதி, கொழும்பு-02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.